# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019–2020

### மானியக் கோரிக்கை எண். 32


**டாக்டர் நிலோபர் கபில்**
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2019

# அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| **1. தொழிலாளர் துறை** | | | |
| 1.1. | செயல்பாடுகள் | | 2 |
| 1.2. | நிர்வாக அமைப்பு | | 4 |
| 1.3. | தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள் | | 5 |
| | 1.3.1. | தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள் | 5 |
| | 1.3.2. | ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள் | 12 |
| | 1.3.3. | சமூக பாதுகாப்பு சட்டங்கள் | 15 |
| | 1.3.4. | வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள் | 20 |
| | 1.3.5. | நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள் | 38 |
| 1.4. | நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் | | 40 |
| | 1.4.1. | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 40 |
| | 1.4.2. | அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் | 43 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1.5. | நலத்திட்டங்கள் நிர்வகித்தல் | | 47 |
| 1.6. | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | | 50 |
| 1.7. | தமிழ்நாடு கட்டுமான கழகம் | | 52 |
| 1.8. | சிறப்பு சாதனைகள் | | 53 |
| 1.9. | தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை | | 57 |
| 1.10. | விருதுகள் | | 58 |
| **2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | | | |
| 2.1. | நிர்வாக அமைப்பு | | 61 |
| 2.2. | தொழிற்சாலைகள் சட்டம், 1948 | | 62 |
| 2.3. | கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம், 1996 | | 63 |
| 2.4. | சிறப்பு திட்டங்கள் | | 63 |
| | 2.4.1. | சுயசான்று வசதியுடன் கூடிய எளிதாக்கப்பட்ட ஆய்வு திட்டம் | 63 |
| | 2.4.2. | இணைய வலைதளம் | 69 |
| | 2.4.3. | எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் | 70 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.4.4. | பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட வேண்டிய எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த பதிவேடுகள் | 71 |
| | 2.4.5. | நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம் (Online Monitoring Centre) | 72 |
| | 2.4.6. | பல்வகை வாயு பகுப்பாய்விகள் | 73 |
| 2.5. | இதர செயல்பாடுகள் | | 73 |
| | 2.5.1. | பெருவிபத்து இடர்தரு தொழிற் சாலைகளில் முன்மாதிரி ஒத்திகைகள் | 73 |
| | 2.5.2. | மனை மதிப்பீட்டுக்குழு | 75 |
| | 2.5.3. | பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள் | 75 |
| | 2.5.4. | பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம் | 78 |
| | 2.5.5. | தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் | 79 |
| | 2.5.6. | உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள் | 80 |
| | 2.5.7. | பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | 82 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.5.8. | அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல் | 84 |
| | 2.5.9. | மாநில பாதுகாப்பு விருதுகள் | 85 |
| | 2.5.10 | உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் | 85 |
| **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை வேலைவாய்ப்பு பிரிவு** | | | |
| 3.1. | வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக அமைப்பு | | 87 |
| 3.2. | துறையின் இணையதளம் வழியாக பதிவு செய்தல் | | 90 |
| 3.3. | தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகள் | | 91 |
| | 3.3.1. | பதிவுதாரர்கள் மற்றும் வேலை நாடுநர்களுக்கு வழிகாட்டுதல் | 91 |
| | 3.3.2. | தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் | 92 |
| 3.4. | வேலைவாய்ப்பு அலுவலகங்களின் தன்னார்வ பயிலும் வட்டங்கள் | | 93 |
| 3.5. | கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் | | 95 |
| 3.6. | தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் | | 96 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
| --- | --- | --- |
| 3.7. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டல் | 97 |
| 3.8. | தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள் வெளியிடுதல் | 98 |
| 3.9. | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் | 99 |
| 3.10. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி–யினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் | 100 |
| 3.11. | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 101 |
| 3.12. | வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டங்கள் | 102 |
| 3.13. | மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | 104 |
| 3.14. | பொதுத்துறை பணியமர்த்தல் | 105 |
| 3.15. | தனியார் துறை பணியமர்த்தல் | 105 |

| வ. எண் | | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|---|
| 3.16. | சிறப்பு முயற்சிகள் | | 107 |
| | 3.16.1. | மெய்நிகர் கற்றல் முறை: இணையதள வழி கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மின்–பொருளடக்கம், மின்–புத்தகங்கள் | 107 |
| | 3.16.2. | வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் திறன் பதிவு மற்றும் வழிகாட்டுதலுக்கான சிறப்பு பிரிவுகள் | 108 |
| | 3.16.3. | மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 109 |
| 3.17. | கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் | | 111 |
| 3.18. | சிறப்பு புதுப்பித்தல் சலுகை | | 111 |
| 3.19. | துறையின் தனித்துவம் மிக்க முயற்சி: வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் ‘ஒரு நாள் – ஒரு செயல்பாடு’ | | 112 |
| 3.20. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | | 114 |
| **பயிற்சி பிரிவு** | | | |
| 3.21. | நிறுவன அமைப்பு | | 117 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 3.22. | கைவினைஞர் பயிற்சித்திட்டம் | | 118 |
| | 3.22.1. | அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் | 118 |
| | 3.22.2. | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 122 |
| 3.23. | தொழிற்பயிற்சி நிலையங்களின் தரம் | | 122 |
| 3.24. | பொது சேர்க்கை முறை | | 123 |
| 3.25. | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்படும் பயிற்சி கட்டணம் | | 124 |
| 3.26. | தொழிற்பள்ளிகள் | | 124 |
| 3.27. | அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளுக்கு மானியம் | | 125 |
| 3.28. | பயிற்சியாளர்களை ஊக்குவித்தல் | | 125 |
| 3.29. | பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு | | 126 |
| 3.30. | தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம் | | 127 |
| 3.31. | தேசிய தொழிற் பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS) | | 128 |
| 3.32. | பயிற்சியற்ற இளைஞர்கள் (Freshers) தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர்களாகுதல் | | 129 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.33. | தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன் வலுப்படுத்துதல் (STRIVE) | 130 |
| 3.34. | மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம் | 132 |
| 3.35. | திறன் தேடல் போட்டிகள் | 132 |
| 3.36. | புதிய முனைப்புகள் | 134 |
| 3.37. | புதுமையான திட்டங்கள் | 139 |
| 3.38. | சிறந்த பயிற்றுநர் விருது | 140 |
| 3.39. | கைவினைஞர் பயிற்சித் திட்ட பயிற்றுநர்களின் முன் கற்றலை அங்கீகரித்து இணைய வழியில் CITS சான்றிதழ் வழங்குதல் | 140 |
| 3.40. | அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சி | 141 |
| 3.41. | பெரு நிறுவனங்களின் சமுதாய பொறுப்பு திட்டத்தின் (CSR) கீழ் தொழிற்சாலைகளின் பங்களிப்பு | 142 |
| **4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்** | | |
| 4.1. | தேசிய திறன் கட்டமைப்பை (NSQF) நடைமுறைப்படுத்துதல் | 146 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 4.2. | பயிற்சிகளுக்கான சுதந்திரமான மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் | 147 |
| 4.3. | பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல் | 147 |
| 4.4. | 2018–19–இல் நடத்தப்பட்ட மாவட்ட மற்றும் துறை வாரியான திறன் பயிற்சி விவரங்கள் | 148 |
| 4.5. | மாவட்டந்தோறும் திறன் முகாம் மற்றும் விழிப்புணர்வு | 152 |
| 4.6. | மாநில திறன் மாநாடு மற்றும் மாவட்ட திறன் போட்டிகள் | 153 |
| 4.7. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வலைதளம் மற்றும் அலைபேசி செயலி | 154 |
| 4.8. | பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கான உயர் தொழில்நுட்ப திறன் பயிற்சி | 155 |
| 4.9. | சிறப்பு திட்டங்கள் | 157 |
| 4.10. | அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல் – திறன் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் (Recognition of Prior Learning-RPL) | 158 |
| 4.11. | பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 2.0 | 160 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 4.12. | சங்கல்ப் (SANKALP) – உலக வங்கி நிதி உதவி திட்டம் | | 162 |
| 4.13. | திறன் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான விருதுகள் | | 164 |
| 4.14. | திறன் இடைவெளி குறித்த ஆய்வு மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு திட்டங்கள் | | 165 |
| 4.15. | உயர் திறன் பயிற்சி மையங்கள் | | 167 |
| **5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்** | | | |
| 5.1. | பதிவு | | 170 |
| 5.2. | செயல்பாடுகள் | | 171 |
| 5.3. | பணியமர்த்தல் | | 171 |
| | 5.3.1. | வெளிநாடு | 171 |
| | 5.3.2. | உள்நாடு | 172 |
| 5.4. | வருவாய் | | 172 |
| 5.5. | ஈவுத்தொகை | | 172 |
| 5.6. | புதிய முயற்சிகள் | | 173 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| **6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)** | | |
| 6.1. | தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு | 176 |
| 6.2. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 176 |
| 6.3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் இணைக்கப்படுவதற்கான தகுதிகள் | 179 |
| 6.4. | பயன்கள் | 180 |
| 6.5. | இதர உதவிகள் | 186 |
| 6.6. | புதிய வசதிகள் | 187 |

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை

## 1. தொழிலாளர் துறை

தமிழ்நாடு அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் பொருளாதாரத்தில் மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக நாட்டிலேயே இரண்டாவது பெரிய மாநிலமாக உள்ளது. இம்மாநிலம் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களை பணியமர்த்தியுள்ள மிகவும் உத்வேகத்துடன் கூடிய உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதலீட்டாளர்களுக்கு சாதகமான கொள்கைகள் மற்றும் மேன்மையான பணி கலாச்சாரத்தின் மூலம் தமிழ்நாடு அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்து வருகிறது. தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதுடன் நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமூகமான உறவினை பேணிக்காப்பதில் தொழிலாளர் துறை முக்கிய பங்காற்றுகிறது.

தொழிலாளர் நலன் தொடர்புடைய பெரும்பாலான இனங்கள் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், மத்திய அரசு மற்றும் மாநில அரசிற்கு அவற்றின் மீது அதிகாரம்

உள்ளது. பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள தொடர்புடைய விவரங்கள் பின்வருமாறு :

22. தொழிற்சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிற்தகராறுகள்

23. சமூக பாதுகாப்பு மற்றும் சமூக காப்பீடு; வேலை வாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை.

24. பணி நிலைமைகள், வருங்கால வைப்புநிதி, நிர்வாகத்தின் பொறுப்புகள், பணியாளர் இழப்பீடு, செயல்பாடற்ற மற்றும் முதியோர் ஒய்வூதியம் மற்றும் மகப்பேறு நலன் உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்.

33–A. தர நிர்ணயம் நீங்கலான பிற எடைகள் மற்றும் அளவைகள்

தொழிலாளர் தொடர்புடைய இனங்கள் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், பெரும்பாலான தொழிலாளர் சட்டங்கள் மத்திய அரசின் சட்டங்களாக உள்ளன.

## 1.1 . செயல்பாடுகள்

தொழிலாளர் துறை தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்வதோடு தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

சட்ட அமலாக்கப் பணிகள் பின்வருமாறு

1. பல்வேறு மத்திய மற்றும் மாநில தொழிலாளர் நலச்சட்டங்களை அமலாக்கம் செய்தல்.

2. தொழிலாளர் உரிமைகள் காத்திட நீதிசார் பணிகளை மேற்கொள்ளுதல்.

3. நுகர்வோர் நலன் காத்திட எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருள் விதிகளை அமலாக்கம் செய்தல்.

4. தொழிற்தாவாக்களில் சமரசப் பேச்சுவார்த்தை மூலம் ஒப்பந்தங்கள் ஏற்படுத்துதல்.

5. குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் அமலாக்கம் செய்தல்.

6. கொத்தடிமை தொழிலாளர் முறையை அகற்றி மறு வாழ்வு அளித்தல்.

7. குழந்தை தொழிலாளர் முறையினை அனைத்து பணிகளிலும் நீக்குதல், அபாயகரமான பணிகளில் வளரிளம் பருவத்தினரை பணியமர்த்துவதை தடுப்பதற்கான செயல்பாடுகள்.

8. ஒப்பந்த தொழிலாளர்கள் / மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்துதல்.

**தொழிலாளர் நலம் தொடர்பான துறையின் பணிகள் :**

1. நலவாரியங்கள் மூலம் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

2. பணியின் போது ஏற்படும் விபத்தின் காரணமாக மரணமடைந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு / ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க ஆணையிடுதல்.

3. நடமாடும் மருத்துவமனைகள், அங்கன்வாடி நிலையங்கள் மற்றும் தூங்கும் அறைகள் போன்ற சிறப்பு சேவைகள் வழங்குதல்.

4. பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## 1.2. நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில் தொழிலாளர் துறை 1920–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையிடம் சென்னை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் ஆணையர் தலைமையில், 4 மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் (சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர்), 10 வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் (சென்னை – 1, சென்னை – 2, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல்,

கோயம்புத்தூர், குன்னூர், மதுரை மற்றும் திருநெல்வேலி) பணிபுரிந்து வருகின்றனர்.

இத்துறையில் மொத்தம் 1,823 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர். இவர்களில் 12 கூடுதல் ஆணையர்கள், 16 இணை ஆணையர்கள், 24 துணை ஆணையர்கள், 103 உதவி ஆணையர்கள், 2 உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்), ஒரு கணக்கு அலுவலர், ஒரு மக்கள் தொடர்பு அலுவலர், 70 துணை ஆய்வர்கள், 220 உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 1,271 பணியாளர்கள் அடங்குவர்.

### 1.3. தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள்

தொழிலாளர் துறையில் அமலாக்கம் செய்யப்படும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் விவரம் பின்வருமாறு:

#### 1.3.1. தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள்

வேலையளிப்போர், தொழிலாளர்கள், தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரிடையே நல்லுறவினை ஏற்படுத்துதல், கூட்டு பேரம், தொழிற்தாவாக்களை தீர்த்து

வைத்தல், தொழிலாளர்களின் பணி நிலைமைகள் குறித்த விவரங்கள் தொழில் உறவுகள் ஆகியவை தொடர்புடைய சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

**1.3.1.1. தொழிற்தகராறுகள் சட்டம் , 1947**

இச்சட்டத்தில் தொழிற்தகராறுகள் தீர்த்து வைக்கும் முறைகளும் சமரச ஒப்பந்தங்கள் மற்றும் தீர்வங்களை மீறுவதற்கு தண்டனை அளிப்பது குறித்தும் விளக்கப்பட்டுள்ளதோடு தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், சட்ட விரோத வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பை தடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் சமரச பணிகள் மேற்கொள்ள தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2018–19–ஆம் ஆண்டில் சமரச அலுவலர்களின் தலையீட்டின் மூலம் 1,547 தொழிற்தாவாக்களில் சுமூக முடிவு கண்டுள்ளனர். பல்வேறு தொழில் நிறுவனங்களில் 23 வேலை நிறுத்தங்களும் 2 கதவடைப்புகளும் சுமூகமாக தீர்க்கப்பட்டுள்ளன.

**(அ) 2018–19–ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய தொழிற்தகராறுகள்**

- ❖ தமிழ்நாடு மின்பகிர்மான கழக நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களிடையே தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு கோரிக்கைகள் குறித்து **22.02.2018** அன்று **1947–**ஆம் வருடத்திய தொழிற்தகராறு சட்டப்பிரிவு **12(3)–**ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் **79,100** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இந்த ஒப்பந்த காலம் **01.12.2015** முதல் **30.11.2019** முடிய நான்கு ஆண்டுகள் அமலில் இருக்கும்.

- ❖ சென்னை, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடியில் செயல்பட்டு வரும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையே, **06.03.2019** அன்று **62** தொழிலாளர்கள் பயனடையும் வகையில், **1947–**ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டப்பிரிவு **12(3)–**ன் கீழ் சமரச ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் **01.04.2015**

முதல் **31.03.2019** வரை நான்கு ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும்.

- ‘108 ஆம்புலன்ஸ்’ சேவையின் **4,000** தொழிலாளர்கள் பயனடையும் வகையில் அவர்களின் போனஸ், ஊதிய உயர்வு மற்றும் விடுப்பு சலுகைகள் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து இரண்டு ஒப்பந்தங்கள் முறையே **07.06.2018** மற்றும் **02.11.2018** ஆகிய நாட்களில் **1947**–ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு **12(3)**–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டன.

- காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ராயல் என்பீல்டு நிர்வாகத்திற்கும் அதன் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடையே **04.06.2019** அன்று தொழிற்தகராறு சட்டம் பிரிவு **12(3)**–ன் கீழ் ஒரு சமரச ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தம் **01.04.2019** முதல் **31.03.2022** வரை மூன்றாண்டுகளுக்கு அமலில் இருக்கும். இவ்வொப்பந்தத்தால் **1,180** தொழிலாளர்கள் பயனடைகின்றனர்.

❖ காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் முன்பாக **14.11.2018** அன்று நடைபெற்ற அமைதி பேச்சு வார்த்தையில் இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் மற்றும் இந்தியா யமஹா மோட்டார் தொழிலாளர்கள் சங்கம் ஆகியோரிடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி **700** தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டத்தைக் கைவிட்டு மீண்டும் பணிக்கு திரும்பினர்.

## (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் தீர்ப்பாயங்கள்

தொழில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் தொழில் நல்லுறவினை மேம்படுத்துவதற்கும் தொழிற்தாவாவில் தொடர்புடைய பிரச்சினைகளின் தன்மையின் அடிப்படையில் முடிவு காணப்படாத அனைத்து தாவாக்களும் தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு **10–**ன்கீழ் தொழிலாளர் நீதிமன்றங்களுக்கும் தொழில் தீர்ப்பாயத்திற்கும் தீர்ப்புக்காக அனுப்பப்படுகின்றன.

**1947**–ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழான அட்டவணை இரண்டில் குறிப்பிட்டுள்ள இனங்கள் மீது தொழிலாளர் நீதிமன்றங்கள், தீர்வங்கள் வழங்கும் மன்றமாக செயல்படுகின்றன. சமரச பேச்சுவார்த்தைகளில் சுமூக தீர்வு காண இயலாத தொழிற்தகராறுகளில் தீர்வம் வழங்க தமிழ்நாட்டில் **16** தொழிலாளர் நீதிமன்றங்கள் உள்ளன. சென்னையில் **4** தொழிலாளர் நீதிமன்றங்களும் வேலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் தலா **2** தொழிலாளர் நீதிமன்றங்களும் சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணத்தில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்படுகின்றன. ஒசூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய **2** இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்களை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இரண்டு நீதிமன்றங்களும் விரைவில் செயல்பட உள்ளன. **2018**–ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் **2,649** வழக்குகளை முடித்துள்ளது.

**1947**–ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம், அட்டவணை **3**–ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் மீது தீர்வு காணும் மன்றமாக தொழிற் தீர்ப்பாயங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் சென்னையில் ஒரு தொழிற் தீர்ப்பாயம் இயங்கி

வருகிறது. இத்தீர்ப்பாயம் 2018–ஆம் ஆண்டில் 40 வழக்குகளில் தீர்வு கண்டுள்ளது.

### 1.3.1.2. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

தொழிலாளர்களின் பணி நிலைமைகளை வரையறுக்க சான்றளிக்கப்பட்ட நிலையாணைகளை வேலையளிப்போர் பெறுவதை இச்சட்டம் அவசியமாக்குகிறது. இச்சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்களால் இதுவரை 10,432 நிலையாணைகளுக்கு சான்று அளிக்கப்பட்டுள்ளது. 2018–19–ஆம் ஆண்டில் மட்டும் 329 தொழில் நிறுவனங்களுக்கு நிலையாணைகள் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

### 1.3.1.3. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்திடவும் மற்றும் தொழிற்சங்க பதிவு குறித்த நடைமுறையினை வகுத்திடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. தொழிற்சங்கங்களின் கூடுதல் பதிவாளர்களால் (தொழிலாளர் இணை ஆணையர்) இதுவரை மொத்தம் 12,171 தொழிற்சங்கங்கள் பதிவு

செய்யப்பட்டுள்ளன. 2018–19–ஆம் ஆண்டில் 140 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.3.2. ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள்

இச்சட்டங்கள் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்தல், உரிய காலத்தில் சம்பளம் மற்றும் போனஸ் வழங்குதல் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கு இணையான சம ஊதியம் வழங்குவதை உறுதி செய்கின்றன.

#### 1.3.2.1. சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936

இச்சட்டம் பணியாளர்களுக்கு உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படுவதையும் கேட்பு மனுக்களை விரைந்து முடிக்கவும் ஊதியத்தில் சட்ட விரோத பிடித்தத்தை தடுக்கவும் வழிவகை செய்கிறது.

சம்பளப் பட்டுவாடா சட்டத்தின்கீழ் 01.04.2018 முதல் 31.03.2019 வரை அமலாக்க அலுவலர்களால் 45,543 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இக்காலகட்டத்தில் நீதிமன்றங்கள் மூலம் 17 வழக்குகள் முடிக்கப்பட்டு பல்வேறு முரண்பாடுகளுக்காக

வேலையளிப்பவர்களுக்கு ரூ.12,750/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**1.3.2.2. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948**

1948–ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் நோக்கமானது இச்சட்டத்தின் அட்டவணையில் உள்ள தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்வதாகும். இச்சட்டம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் அவர்களின் திறனையும் பாதுகாக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், 1948–ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் 94 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் 77 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக தமிழ்நாட்டில், குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும், 2018–2019 வரையிலான காலத்தில், 25 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 19 தொழில்களுக்கு மறுநிர்ணயம் செய்யும் பொருட்டு முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**01.04.2018** முதல் **31.03.2019** வரையிலான காலத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அமலாக்க அலுவலர்களால் **1,33,224** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட **131** வழக்குகளில் ரூ.**36,200/–** அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. **746** கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு ரூ.**8.44** கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.2.3. போனஸ் வழங்கல் சட்டம், 1972

இலாபம் மற்றும் உற்பத்தி அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கிட இச்சட்டம் வழிவகுக்கிறது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 10–க்கு கீழ் குறையும் நேர்விலும் நிறுவனங்களால் தொடர்ந்து போனஸ் வழங்கப்பட வேண்டும்.

### 1.3.2.4. சம ஊதியச் சட்டம், 1976

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கவும் வேலைவாய்ப்பு தொடர்புடைய இனங்களில் பாலின அடிப்படையிலான வேற்றுமையைத் தடுப்பதற்கும் இச்சட்டம் வழிவகுக்கிறது. வேலையளிப்பவர், ஒரே மாதிரியான அல்லது ஒரே தன்மையுடைய பணிகளில் ஈடுபடும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**01.04.2018** முதல் **31.03.2019** வரையிலான காலத்தில் **1976**–ஆம் வருடத்திய சம ஊதியச் சட்டத்தின்கீழ், அமலாக்க அலுவலர்கள் **19,866** ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

### 1.3.3. சமூக பாதுகாப்பு சட்டங்கள்

இச்சட்டங்கள் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கும் பிழைப்பூதியம் வழங்குவதற்கும் நிரந்தரத் தகுதி வழங்குவதற்கும் பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால சலுகைகள் வழங்குதல் மற்றும் விபத்தின் காரணமாக பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் வழிவகை

செய்கின்றன. சமூக பாதுகாப்பு வழங்குதல் மற்றும் நலத் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவை இச்சட்டங்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

### 1.3.3.1. பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

பணியில் இருக்கும் போது பணியிடை விபத்தின் காரணமாக நிகழும் மரணம் மற்றும் ஊனத்தினால் ஏற்படும் ஊதியம் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டப்படி மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் பணியாளர் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டு வழக்கினை நடத்தி உத்தரவு பிறப்பிக்கிறார்கள். இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால் ஆணையாளரிடம் வைப்பீடு செய்யப்படுகிறது. இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 2018–19–ஆம் ஆண்டில் 2,573 வழக்குகள் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.51.84 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.3.3.2. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972

பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்கிட இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டப்படி 5 வருடத்திற்கு குறைவில்லாத தொடர் பணி முடித்த தொழிலாளருக்கு வயது முதிர்வு / பணி ஓய்வு, பணியிலிருந்து விலகுதல் ஆகிய காரணங்களுக்காக பணிக்கொடை வழங்கப்படுகிறது. மேலும் மரணம் அல்லது விபத்து மற்றும் நோயின் காரணமாக இயலாமை ஏற்படும் நேர்விலும் பணிக்கொடை வழங்கப்படுகிறது.

வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களில் பணியாற்றும் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2018–19–ஆம் ஆண்டில், 2,521 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.18.64 கோடி பணிக்கொடைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கூடுதல் தொழிலாளர்

ஆணையர்களால் **426** மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

**1.3.3.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களில் பணியாற்றும் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் வட்டார இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**2018–19**–ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் **111** மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.**52.91** இலட்சம் பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் **24** மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டன.

### 1.3.3.4. மகப்பேறு நலச் சட்டம், 1961

பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய குறிப்பிட்ட காலத்தில் பணி நிலையினை முறைப்படுத்தவும், மகப்பேறு நல உதவிகளை வழங்கிடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இச்சட்டம், மகப்பேறு காலங்களில் குழந்தைப்பேற்றிற்காக 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு (அதாவது குழந்தை பிறப்பதற்கு முன் 8 வாரங்களும், குழந்தை பிறந்த பிறகு 18 வாரங்களும்) வழங்கிட வழிவகுக்கிறது.

01.04.2018 முதல் 31.03.2019 வரையிலான காலத்தில் 1961–ஆம் வருடத்திய மகப்பேறு நலச் சட்டத்தின்கீழ், அமலாக்க அலுவலர்களால் 18,046 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.3.3.5. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981

இச்சட்டம், ஒரு தொழில் நிறுவனத்தில் 24 மாத காலத்தில், 480 நாட்கள் தொடர்பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வகை செய்கிறது. 2018–19–ஆம்

ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் **546** மனுக்களின் மீது தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேலையளிப்பவர்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.3.6. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982

இச்சட்டம் சில வகையான தொழில்களில் ஈடுபடும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும், பணி பாதுகாப்பினை உறுதி செய்யவும் வழிவகை செய்கிறது.

### 1.3.3.7. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டம், 1972

தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தவும் தொடர்புடைய பிற இனங்களுக்காகவும் ஒரு நிதியத்தினை உருவாக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.

### 1.3.4. வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள்,

பத்திரிக்கை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை இச்சட்டங்கள் முறைப்படுத்துகின்றன. மேலும் இச்சட்டங்கள் ஒப்பந்த பணியினை முறைப்படுத்துதல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கும் வகை செய்கிறது.

### 1.3.4.1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. மாநிலத்தில் 3,29,426 கடைகள் மற்றும் நிறுவனங்கள் உள்ளன. 2018–19–ஆம் ஆண்டில் அமலாக்க அலுவலர்களால் 3,18,223 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 17,725 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வாக முடிக்கப்பட்டு, இணக்க கட்டணத் தொகையாக ரூ.44.40 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. இம்மாநிலத்தில் **32,938** உணவு நிறுவனங்கள் உள்ளன. **2018–19–**ஆம் ஆண்டில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.**118.00** இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் **45,394** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, **7,914** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவு தீர்வாக முடிக்கப்பட்டு, ரூ.**14.02** இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4.3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961

மோட்டார் போக்குவரத்து நிறுவன தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பணி நிபந்தனைகளைப் பாதுகாக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டில் **3,464** மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு

செய்யப்பட்டு அதில் 1,48,717 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

2018–19–ஆம் ஆண்டில் 189 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.1,79,300/– பதிவுக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில், 6,307 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 1,477 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இணக்கக் கட்டணமாக ரூ.5.24 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4.4. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்த தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951 மற்றும் விதிகள் வழிவகை செய்கிறது. ஐந்து ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பரளவு மற்றும் 15 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் டீ, காபி, இரப்பர், ஏலக்காய் மற்றும் சின்கோனா பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, குழந்தை காப்பகம், கல்வி வசதி, குளிர்கால பாதுகாப்பு

உடை, குடிநீர் ஆகியன வேலையளிப்பவரால் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகள், தலைமை தோட்ட நிறுவன ஆய்வர், 10 தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்ட நிறுவனங்கள்) மற்றும் 2 உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்) ஆகியோரால் தமிழ்நாடு முழுவதிலும் அமல்படுத்தப்படுகிறது.

சென்னையில் தலைமை தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகமும், உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர், வால்பாறை, ஏற்காடு, வத்தலக்குண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் தொழிலாளர் உதவி ஆணையர் (தோட்டங்கள்) அலுவலகங்களும் அமைந்துள்ளன. மேலும், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 2 இடங்களில் உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அலுவலகங்கள் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த 2,229 தோட்ட நிறுவனங்களின் மொத்த பரப்பளவு 62,134 ஹெக்டேர் ஆகும். இதில் 687 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு

**54,483** ஹெக்டேர் மற்றும் **1,542** பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு **7,651** ஹெக்டேர் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் **56,794** மொத்த தொழிலாளர்களில் **34,388** பெண்களும் **22,406** ஆண்களும் உள்ளனர்.

**01.04.2018** முதல் **31.03.2019** வரையான காலத்தில் சட்ட அமலாக்க அலுவலர்களால் தோட்ட தொழிலாளர்கள் சட்டம் மற்றும் அதன் விதிகளின்கீழ் **2,115** ஆய்வுகள் உட்பட அதன் தொடர்புடைய சட்டத்தின் கீழ் மொத்தம் **24,411** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் **57** வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு ரூ.**3,92,500/–** வேலையளிப்பவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

### 1.3.4.5. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966

பீடி மற்றும் சுருட்டு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பேணவும் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. **01.04.2018** முதல் **31.03.2019** வரை

**3,235** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் மூலம் **96** வழக்குகள் முடிவுக்கு வந்துள்ளன.

**1.3.4.6. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955**

உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் பத்திரிக்கை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. மேலும், இச்சட்டம் உழைக்கும் பத்திரிக்கையாளர்கள், நாளிதழ்கள் மற்றும் செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் அல்லாத பிற பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்ய ஊதிய குழுக்களை அமைக்கவும் வழிவகை செய்கிறது. ‘மஜிதியா குழுவின்’ பரிந்துரைகள் **11.11.2011** முதல் நடைமுறையில் உள்ளன.

**1.3.4.7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958**

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு

விடுமுறை நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. **2018–19–**ஆம் ஆண்டில், **1,09,276** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் **10,431** நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவுத் தீர்வாக ரூ.**30.67** இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.3.4.8. ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970**

ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிலையினை குறிப்பிட்ட சில நிறுவனங்களில் ஒழுங்குபடுத்தவும் சில தொழில்களில் இம்முறையினை நீக்கவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் **01.04.2018** முதல் **31.03.2019** வரை **274** முதன்மை வேலை அளிப்போருக்கு பதிவுச் சான்றுகளும், **449** ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**1.3.4.9. மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979**

சொந்த மாநிலங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்று பணிபுரியும் தொழிலாளர்களை பாதுகாத்து, அவர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் இயற்றப்பட்டது. தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும். **01.04.2018** முதல் **31.03.2019** வரையிலான காலத்தில் **6** பதிவுச் சான்றுகளும் **10** உரிமங்களும் முறையே முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**1.3.4.10.குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986**

இச்சட்டம், குழந்தை தொழிலாளர்கள் அனைத்து வகையான தொழில்களிலும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் அபாயகரமான தொழில்கள், செயல்முறைகள் மற்றும் அதனுடன் இணைந்த தொழில்களிலும் பணிபுரிவதை தடை செய்கிறது.

**(அ) குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்**

தமிழக அரசானது 2025–ஆம் வருடத்திற்குள் அனைத்து வகையான குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றும் பொருட்டு குழந்தை உழைப்பின் மோசமான வடிவங்கள் மற்றும் கட்டாய உழைப்பு ஆகியவற்றை அகற்றுவதற்கு உடனடியான உறுதியான நடவடிக்கையினை மேற்கொண்டு நிலையான வளர்ச்சி குறியீடான 8.7ஐ (நிலையான வளர்ச்சி இலக்கு எண்.8) எட்ட தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

நடைமுறையிலுள்ள சட்ட இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு உறுதியான முயற்சியாக, மத்திய அரசானது 2016–ஆம் வருட திருத்திய குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தினை உருவாக்கியுள்ளது. இதன்படி 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எவ்வித பணியிலும் ஈடுபடுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளதுடன், வளரிளம் பருவத்தினர் (14 முதல் 18 வரை) ஈடுபடும் பணிகள் முறைப்படுத்தப்பட்டு அபாயகரமான தொழில்களில் பணி செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு

சட்டத்தின்படி, குழந்தை தொழிலாளர் சட்டத்தின் கீழ் உள்ள தடை வயது 2009–ஆம் வருட குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வயதுடன் இணைக்கப்பட்டுள்ளது. 2025–ஆம் ஆண்டுக்குள் எல்லா வகை தொழில்களிலிருந்தும் குழந்தை தொழிலாளர் முறையை அகற்றிடவும், நிலையான வளர்ச்சி இலக்கு உள்ளிட்ட பன்னாட்டு இலக்குகளை அடையவும் இந்த திருத்தப்பட்ட சட்டம் வழி வகுக்கிறது.

**(ஆ) சட்ட அமலாக்கம்**

குழந்தை தொழிலாளர் முறை அகற்றும் மாநில செயல்திட்டத்தில் சட்ட அமலாக்கம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த உத்தியாகும். சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புப் படைகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குழந்தை தொழிலாளர்களைப் பணியமர்த்துவதை தடை செய்யும் மற்றும் முறைப்படுத்தும் கீழ் குறிப்பிடப்பட்ட சட்டங்களை தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) மற்றும் தொழிலக பாதுகாப்பு

மற்றும் சுகாதார இயக்கக துணை இயக்குநர்கள் அமலாக்கம் செய்து வருகிறார்கள்.

1. குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986.
2. தொழிற்சாலைகள் சட்டம், 1948.
3. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961.
4. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966.
5. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947.
6. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958.
7. தோட்ட தொழிலாளர்கள் சட்டம், 1951.

1986–ம் வருட குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் குழந்தைகளை பணிக்கு அமர்த்துவதை தடைசெய்யும் தொடர்புடைய சட்டங்கள் தொழிலாளர் துறை அமலாக்க அதிகாரிகள் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்களால் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

2018–19–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முறையான, சிறப்பு மற்றும் திடீர் ஆய்வுகளுடன் மாவட்ட தடுப்புப் படை

மூலம் அமைக்கப்பட்ட குழுவின் மூலமும் 2,91,844 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மொத்தம் 55 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 70 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 11 வழக்குகளில் (முந்தைய நிலுவையுடன்) தண்டனை வழங்கப்பட்டு, ரூ.2,70,000/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) விதிகள், 1994–ஐ திருத்தம் செய்து, முதனிலை அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது.

குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநில செயல் திட்டம், அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டமானது அமலாக்க அதிகாரிகளுக்கு உரிய வழிகாட்டுதல்களை அளிக்கவும் மற்றும் தொடர்புடைய பிற துறைகளின் செயல்பாடு, பங்கு குறித்தும், மாநிலத்திலிருந்து முழுமையாக குழந்தை தொழிலாளர் முறை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவது குறித்தும், 2025–க்குள் அனைத்து வகையான தொழில்களிலும் குழந்தை மற்றும்

வளரிளம் பருவ தொழிலாளர்களை அகற்றுவது என்ற குறிக்கோளினை அடையவும் வழிமுறைகளை வகுத்துள்ளது.

**1986–** ஆம் வருட குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தினை சீரிய முறையில் அமலாக்கம் செய்யும் பொருட்டு அரசினால் நிலையான இயக்க நடைமுறைகள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேற்படி நிலையான இயக்க நடைமுறை தமிழ்நாட்டிலுள்ள குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கணக்கெடுப்பு எடுத்தல், குழந்தை தொழிலாளர்களை மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**(இ) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற **45–**வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சியில் குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், **1986** குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் ஜூன் 12-ஆம் தேதி குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுத்தல், பேரணிகள், மனித சங்கிலிகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. மாநில அளவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின செய்தி பல்வேறு தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் வெளியிடப்பட்டது. தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10–ம் மற்றும் 12–ம் வகுப்பு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசும் சிறப்பாக பணிபுரிந்த சிறப்புப் பயிற்சி மைய ஆசிரியர்களுக்கு கேடயங்களும் வழங்கப்பட்டன.

**(ஈ) தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்**

தமிழ்நாட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் 15 மாவட்டங்களில்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட குழந்தை தொழிலாளர் கண்காணிப்பு குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சங்கம் இயங்கி வருகிறது. தற்போது தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் செயல்படும் **15** மாவட்டங்களில் இயங்கி வரும் **295** சிறப்பு பயிற்சி மையங்களில் 6,162 மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர்கள் கல்வி பயின்று வருகின்றனர். **2018–19–**ஆம் ஆண்டில் முறையான பள்ளிகளில் **2,463** குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட உதவியுடன் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.**400/–** வீதம் உதவி தொகை, கல்வி உபகரணங்கள், இலவச சீருடை மற்றும் இலவச மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. குழந்தை தொழிலாளராக மீட்கப்பட்டு தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட பள்ளிகளில் பயின்று உயர்கல்வியினைத் தொடரும் மாணவ, மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.**500/–** வீதம் உதவித்தொகையாக மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு கல்வியாண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூ.**42.78** இலட்சம் வழங்க அரசின்

அனுமதி பெறப்பட்டு, **713** மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

**1.3.4.11.கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், 1976 கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு முறை**

கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், **1976** மற்றும் மத்திய அரசின் கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டம் என்பது மீட்கப்படும் கொத்தடிமை தொழிலாளர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக நிவாரணங்களை வழங்கி அவர்களின் திறன்கள் மற்றும் அறிவாற்றலை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டதாகும் .

கொத்தடிமை தொழிலாளர்களை கண்டறிதல், விடுவித்தல், மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் தொடர்பாக பல்வேறு துறைகளின் பங்குதாரர்களுக்கு வழிமுறைகளை வகுத்து சட்டத்தினையும் மத்திய அரசின் கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தினையும் தீவிரமாக அமல்படுத்தும் நோக்கில் நிலையான இயக்க நடைமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு உடனடி மறு வாழ்வு நிவாரண

தொகையாக ரூ.20,000/– குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ சிகிச்சை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்படும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு உரிய திட்டங்களின் கீழ் பயன்களைப் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மீட்கப்படும் கொத்தடிமை தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகை வழங்கும் பொருட்டு மாநில அரசானது **2018–19** நிதியாண்டிற்கு ரூ.**125.00** இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. **2018–19**–ஆம் நிதியாண்டில் **352** கொத்தடிமை தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு அவர்களுக்கு ரூ.**62.53** இலட்சம் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் துறை அமலாக்க அதிகாரிகள், வருவாய் துறை கோட்டாட்சியர்கள் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை அலுவலர்களுக்கு கொத்தடிமை தொழிலாளர்களை விடுவித்தல் மற்றும் மீட்டெடுத்தல்

தொடர்பான பயிற்சி வகுப்புகள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.

கொத்தடிமை தொழிலாளர்களது ஆரம்பநிலை கணக்கெடுப்பு முதல் இறுதிகட்ட வழக்கு முடிவு வரையும் மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் முதலான விவரங்களையும் உள்ளடக்கி பதிவு செய்ய விரிவான தகவல் தொகுப்பு BLMS வலைதளம் தொழிலாளர் துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

### 1.3.5. நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள்

சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப்பொருள்) விதிகள் ஆகியவற்றை அமலாக்கம் செய்வதன் மூலம் நுகர்வோர் நலனைப் பாதுகாக்க வழிவகை செய்கிறது. தொழில், வணிகம் மற்றும் பல்வேறு வியாபார நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் எடையளவுகளின் மூலம் விற்பனை செய்யப்படும் பொருட்களின் அளவு துல்லியமாகவும் உரிய விலைக்கேற்ப சரியான அளவிலும் விநியோகம் செய்யப்படுவது உறுதிபடுத்தப்படுகிறது. சட்டமுறை எடையளவு (பொட்டலப்

பொருட்கள்) விதிகளின்படி பொட்டலப் பொருட்களின் மேல் சில அறிவிப்புகளை கட்டாயம் வெளியிட வேண்டியுள்ளதுடன் அதிகபட்ச சில்லரை விலைக்கு மேல் விற்கப்படுவது தடுக்கப்படுகிறது.

### 1.3.5.1. சட்டமுறை எடையளவு சட்டம், 2009

சட்டமுறை எடையளவு சட்டம் **2009–ன்** கீழ் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவுகள் அமலாக்கம் செய்யப்படுவதால் நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படுகிறது. எடைகள், அளவைகள் மற்றும் எண்ணிக்கைகள் மூலம் விற்பனை செய்யப்படும் தொழில் மற்றும் வணிகம் இதன்மூலம் முறைப்படுத்தப்படுகிறது.

**2018–19–**ஆம் நிதியாண்டில் ரூ.**2.73** லட்சம் உரிமகட்டணமாகவும், ரூ.**32.86** கோடி முத்திரைக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியாண்டில் **3,51,050** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு **14,061** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இணக்க கட்டணமாக ரூ. **1.31** கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.3.5.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011**

பொட்டலமிடப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுவதற்கு முன்பாக அப்பொட்டலங்களில் சட்டரீதியாக அறிவிக்கை செய்யப்பட்ட வேண்டிய இனங்களை நுகர்வோர் அறியும் வகையில் பொட்டலப் பொருட்களில் அச்சிட்டு விற்பனை செய்வதனை சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருள்) விதிகள், **2011** உறுதி செய்கிறது.

இவ்விதிகளின்படி, **2018–19**–ஆம் நிதியாண்டில் ரூ.**2.27** லட்சம் பதிவுக்கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியாண்டில் **1,30,389** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு **3,182** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இணக்கக்கட்டணமாக ரூ.**93.81** இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.4.** **நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்**

**1.4.1.** **தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்**

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக **1972**–ஆம் ஆண்டு

இயற்றப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் நிறுவனத்திடமிருந்து பெறப்படும் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையின் மூலம் பல்வேறு நலத் திட்ட பயன்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டொன்றுக்கு ரூ.10/–ம், வேலையளிப்பவர் ஒரு தொழிலாளிக்கு ரூ.20/–ம், அரசு ஒரு தொழிலாளிக்கு ரூ.10/– என்ற வீதத்திலும் தொழிலாளர் நல நிதி செலுத்தி வருகின்றனர். நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் விதிக்கப்படும் இணக்க கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியில் செலுத்தப்படுகிறது.

தொழிலாளர் நல நிதி, கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது.

- தொழிலாளர்களைச் சார்ந்தவர்களுக்காக தையற் பயிற்சி வகுப்புகள்.

- ❖ தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக குழந்தைகள் காப்பகம்.
- ❖ கல்வி உதவித்தொகை, கல்வி ஊக்கத்தொகை மற்றும் பாடநூல் உதவித்தொகை திட்டங்கள்.
- ❖ அடிப்படை கணினி பயிற்சி உதவித்தொகை திட்டம்.
- ❖ திருமண உதவித்தொகை.
- ❖ மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவி, செயற்கை உறுப்புகள் மற்றும் மூன்று சக்கரவண்டி வாங்க உதவித்தொகை.
- ❖ இயற்கை மரண உதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை.
- ❖ விபத்து மரண உதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை.

தொழிலாளர்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் தங்குவதற்கு வசதியாக மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக தொழிலாளர் ஆணையர் அலுவலகம் அருகே ‘ஜீவா இல்லம்’ செயல்பட்டு வருகிறது.

தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர் படித்து பயன்பெறும் வகையில் தொழிலாளர் நலன் சம்பந்தமான நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் கட்டுரைகளை உள்ளடக்கிய ‘உழைப்பவர் உலகம்’ எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

### 1.4.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டம் இயற்றுவதில் தமிழ்நாடு ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. 1982–ம் வருடத்திய தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் இயற்றப்பட்டு அதனடிப்படையில் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் இனங்களில் பணிபுரியும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசால் உருவாக்கப்பட்டுள்ள 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் விவரம் பின்வருமாறு:

# அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

| வ. எண். | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவை தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமர தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினை தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம் |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 17. | தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் |

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

## நலத்திட்ட உதவிகளின் வகைகள்

| வ. எண். | உதவித்தொகைகள் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணத் திட்டம்<br>அ) விபத்து மரணம்<br>ஆ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப)<br><br>இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி<br><br>ஈ) பணியிடத்தில் விபத்து மரணம் (பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) | <br>1,00,000/–<br>1,00,000/– வரை<br><br>மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் நிர்ணயிக்கும் தொகை<br><br>5,00,000/– |
| 2. | இயற்கை மரண உதவி தொகை | 20,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 5,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை<br>அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | <br>1,000/– |
| | ஆ) 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) முறையான பட்டப்படிப்பு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br>1,500/–<br>1,750/– |

| | | | |
|---|---|---|---|
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br>4,000/–<br>5,000/– |
| | ஏ) | முறையான தொழில் நுட்பப்பட்டப்படிப்பு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br>4,000/–<br>6,000/– |
| | ஐ) | முறையான தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br>6,000/–<br>8,000/– |
| | ஒ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br>1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித்தொகை<br>அ) ஆண்<br>ஆ) பெண் | | <br>3,000/–<br>5,000/– |
| 6. | மகப்பேறு உதவித்தொகை<br>மருத்துவ ரீதியிலான<br>கருக்கலைப்பு / கருச்சிதைவு | | 6,000/–<br><br>3,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | | 500/–வரை |
| 8. | ஓய்வூதியம் | | 1,000/–பிரதி மாதம் |

## கட்டுமான தொழிலாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள கூடுதல் நலத்திட்ட உதவிகள்

| வ. எண் | உதவித்தொகைகள் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | பணியிடத்தில் விபத்து மரணம் (பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) | 5,00,000/- |
| 2. | குடும்ப ஓய்வூதியம் | 500/- பிரதி மாதம் |

**1.5. நலத்திட்டங்கள் நிர்வகித்தல்**

அமைப்புசாரா தொழிலாளர்களின் பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு பரிசீலனை மற்றும் உதவித் தொகைகள் வழங்குதல் ஆகிய பணிகளை மாவட்ட அளவில் 35 தொழிலாளர்கள் உதவி ஆணையர்கள் (சமூக பாதுகாப்புத் திட்டம்) 32 மாவட்டங்களில் நிர்வகித்து வருகின்றனர்.

மாவட்ட அளவில் அமைந்துள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தின் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையிலும் அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகள் குறித்து முடிவெடுக்கவும் பல்வேறு துறைகளின் அரசு பிரதிநிதிகள், வேலையளிப்பவர், தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகளைக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட கண்காணிப்புக் குழு செயல்பட்டு வருகிறது.

மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்கள் மற்றும் நல வாரியங்களின் தலைமை அலுவலகங்களின் பணிகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், பதிவு மற்றும் பதிவினைப் புதுப்பிக்கும் நேர்வில் தொழிலாளர்களின்

புகைப்படம் கணினியில் இணைக்கப்பட்ட வெப் கேமிரா மூலம் எடுக்கப்பட்டு அவர்களின் விவரங்கள் இணையதள மென்பொருள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அலுவலகங்களின் வெளிப்படைத் தன்மையை நிலை நாட்டும் விதத்தில் அனைத்து நலத் திட்ட உதவிகளும் ரிசர்வ் வங்கியின் மின்னணு பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது. **01.04.2018** முதல் **31.03.2019** வரை பதிவு மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளின் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம்**

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் | 1,54,900 | 1,94,281 | 111.63 |
| 2 | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் | 7,344 | 13,838 | 06.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 14 நல வாரியங்கள் | 71,621 | 2,32,478 | 77.96 |
| | **மொத்தம்** | **2,33,865** | **4,40,597** | **195.79** |

## நிதி ஆதாரங்கள்

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தால் கட்டிடம் மற்றும் இதர கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் 1% பங்களிப்பு மேல் வரியாக (Cess) பெறப்படுகிறது. **2018–2019–**ஆம் நிதியாண்டில் ரூ.**566.95** கோடி மேல் வரியாக பெறப்பட்டுள்ளது.

1974-ம் வருடத்திய தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டத்தின்படி, வசூலிக்கப்படும் மோட்டார் வாகன வரியில் கூடுதலாக 1% வசூலிக்கப்பட்டு பெறப்படும் நிதியிலிருந்து தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் **2018–2019–**ஆம் நிதியாண்டில் ரூ.**10.21** கோடி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களுக்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2018–2019–ஆம் நிதியாண்டிற்கு ரூ.79.92 கோடியை அரசு ஒதுக்கீடு செய்தது. மேலும், நடப்பாண்டிற்கு ரூ.149.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.6. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும். இக்கல்வி நிலைய நிர்வாக செலவுகளுக்காக ஆண்டுதோறும் ரூ.2.17 கோடி மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையியலில் இளங்கலை பட்டப்படிப்பு பி.ஏ. – (எல்.எம்), முதுகலை பட்டப்படிப்பு எம்.ஏ. – (எல்.எம்), முழுநேர மற்றும் பகுதிநேர ஆராய்ச்சி (பிஎச்.டி.) படிப்பு, பகுதிநேர தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) மற்றும் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற பகுதி நேர (வார இறுதி நாட்கள் – சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) பட்டயப் படிப்பு தொழிலாளர் மேலாண்மை மற்றும் மனித வள மேலாண்மையில் பணிபுரிவோர்களின் தேவைகளுக்கேற்ப நடத்தப்பட்டு வருகிறது. 2018–19–ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையம் நடத்திய 13 கருத்தரங்குகள் / பயிற்சி வகுப்புகள் வாயிலாக 925 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தற்போது இக்கல்வி நிலையம் வாடகைக்கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்வி நிலையத்திற்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்காக அம்பத்தூர் ஐ.டி.ஐ. வளாகத்தில் 3 ஏக்கர் நிலம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.18.74 கோடி செலவில் கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது.

## 1.7. தமிழ்நாடு கட்டுமான கழகம்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு 'தமிழ்நாடு கட்டுமான கழகம்' என்ற பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமான கழக அலுவலகம் டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரியக் கட்டிடத்தில் 04.01.2013 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு கட்டுமான கழகத்தின் மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக 785 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியை இலவசமாக அளிப்பதோடு மட்டுமல்லாமல் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் தேசிய தொழில் நெறி கல்விப் பயிற்சி (National Council for Vocational Training) சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தமிழ்நாடு கட்டுமான கழகத்துடன் இணைந்து கட்டுமான தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தால் ரூ.**6.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை **23,000** தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 1.8. சிறப்பு சாதனைகள்

❖ கட்டுமான தொழிலாளர்களின் நலனுக்காக சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் நகரும் மருத்துவமனைகள் மூலம் கட்டுமான தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் பணிபுரியும் பணியிடத்திலேயே சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றன. **31.05.2019** வரை **80,934** கட்டுமான தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி அனைவரும் பயன் பெறும் வகையில் ரூ.**18.28** கோடி செலவில் **47** நகரும் மருத்துவ வாகனங்கள் வாங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

- வெளி மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்ய அனுமதிப்பதன் வாயிலாக, வெளி மாநில இடம் பெயர் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை நீட்டித்து வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. **31.03.2019** வரை **21,538** வெளிமாநில தொழிலாளர்கள் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

- பணியில் ஈடுபட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டு பணியிடங்களில் அல்லது மருத்துவமனைகளில் மரணிக்கும் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கு விபத்து மரண நிதி உதவி ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ஐந்து லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் பணியிடத்தில் விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் மரணிக்கும் கட்டுமான தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- கட்டுமான தொழிலாளர்களது குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்கிடும்

வகையில், அங்கன்வாடி வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 1,036 கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

- ❖ தமிழ்நாடு அரசு ரூ.1.05 கோடி செலவில் அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்யும் முறையை எளிமைப்படுத்தவும் நலத் திட்ட உதவிகளை விரைவாக பெறுவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளும் கட்டிட வரைபட அனுமதி அளிக்கும் அமைப்புகளும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையினை இணையதளம் (Online) மூலமாக செலுத்தும் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.
- ❖ ஓய்வூதியதாரர் இறந்து விட்டால் அவரது கணவர் / மனைவி ஆகியோருக்கு தகுதிக்குட்பட்டு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.400/–லிருந்து ரூ.500/–ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.
- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கட்டுமான தொழிலில் ஈடுபடும் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 400 அம்மா உணவகங்களில் இலவசமாக உணவு வழங்கும் திட்டம் 04.03.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- ❖ மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான பிரதம மந்திரி ஓய்வூதிய திட்டம் (PM-SYM) குஜராத்தில் உள்ள அகமதாபாத்தில் **05.03.2019** அன்று துவக்கி வைக்கப்பட்டது. அதே நாளில் தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக பிரதம மந்திரி ஓய்வூதிய திட்டம் மாண்புமிகு அமைச்சர் டாக்டர். நிலோபர் கபில் மற்றும் தமிழக அமைச்சர்கள் முன்னிலையில் அப்போதைய மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களால் சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. **03.07.2019** வரை **47,828** தொழிலாளர்கள் பிரதம மந்திரி ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர்.

- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக கட்டிட வளாகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

### 1.9. தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை

சட்டப்படியாக பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளில் பெரிய அளவில் மறு சீரமைப்பு கொண்டு வரவும் பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சேவைகள் மற்றும் அவற்றின் நடைமுறைகளை எளிமைப்படுத்தவும் தொழிலாளர் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தொழில் நடத்துவதை எளிதாக்கும் வகையில் மின்னணு பரிவர்த்தனை வசதியுடன் கூடிய பதிவு, உரிமம் வழங்குதல், புதுப்பித்தல் ஆகிய செயல்பாடுகளுக்கும் பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் ஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற எளிய நடைமுறைகளைச் செயல்படுத்திடவும் இத்துறையானது ஒரு இணையதள வலைப்பக்கத்தினை உருவாக்கியுள்ளது.

பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல், புதுப்பித்தல் ஆகிய நடைமுறைகள் இணைய வழி மூலமாகவே மேற்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டபின் அவை இணைய வழியாகவே உரிய

அலுவலரால் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். பின்னர் பயனாளிகள் இறுதியான மின்னணு கையொப்பத்துடன் கூடிய ஒப்புதல் அளிக்கப்பட்ட சான்றினை இணைய வழி மூலமாக பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் பலதரப்பட்ட ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யப்படுவதைத் தவிர்த்திட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில் நிறுவனங்களின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் இருந்து வரும் சுமையான பணிகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கணினி வழியில் ஆய்வாளர் ஒதுக்கீடு மற்றும் நிறுவனங்களின் தன்மையின் அடிப்படையில் ஆய்விற்குரிய நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை அறிமுகப்படுத்தப்படுவதன் மூலமாக வெளிப்படைத்தன்மை மற்றும் சட்ட அமலாக்கம் எளிமைப்படுத்தப்படுகிறது.

### 1.10. விருதுகள்

வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே தொழில் நல்லுறவுகளை வளர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு 'தொழில் நல்லுறவு விருதுகள்' என்ற

திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. விருது பெறுவோரை தேர்ந்தெடுப்பதற்கான இக்குழுவிற்கு ஓய்வு பெற்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி தலைவராகவும் தனி தொழிலாளர் இணை ஆணையர் செயலாளராகவும் வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களால் சிறந்த வேலையளிப்பவர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் **32** விருதுகள் **11.02.2019** அன்று நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன.

## 2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

அதிகளவிலான உற்பத்தி தொழிற்பிரிவுகளைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில் **44,129** தொழிற்சாலைகளில் **21,34,463** தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்திய அளவில் மோட்டார் வாகன ஏற்றுமதியில் **22** சதவீதமும் மொத்த நூற்பாலைகளில் **50** சதவீதம் பங்களிப்பும் ஆயத்த ஆடை ஏற்றுமதியில் **50** சதவீதமும் உள்நாட்டு தேவைக்கான ஆயத்த ஆடையில் **50** சதவீத பங்களிப்பினையும் இம்மாநிலம் அளிக்கிறது. இவை அனைத்தும் முதலீட்டாளர்களுக்கான சுமூகமான சூழ்நிலைகள், மாநில அரசின் நேர்மறையான அணுகுமுறை, மிகுந்த திறன் வாய்ந்த தரமிக்க அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் மற்றும் தரமான உள்கட்டமைப்பு ஆகிய ஒருங்கிணைந்த காரணிகளால் சாத்தியமாகியுள்ளது.

தொழிலாளர்கள் இம்மாநிலத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககமானது, தொழிலாளர் நலச்சட்டங்களை முறையாக அமல்படுத்துவதன் மூலம் தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும்

தொழிலாளர்களது பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**2.1. நிர்வாக அமைப்பு**

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் இயங்கி வருகிறது. இது **1987–**ஆம் ஆண்டு தொழிலாளர் துறையிடமிருந்து தனித்துறையாக பிரிக்கப்பட்டு தொழிற்சாலைகள் மற்றும் கட்டிடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களை நிர்வகித்து வருகிறது.

இந்நிறுவனங்களில் சம்பள பட்டுவாடா சட்டம், குறைந்தபட்ச ஊதியச் சட்டம், ஒப்பந்த தொழிலாளர் சட்டம், மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த தொழிலாளர் சட்டம், குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் சட்டம் மற்றும் சம ஊதிய சட்டம் போன்ற தொழிலாளர் தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் அமல்படுத்தி வருகிறது. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப்பிரிவில் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநரும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப்பிரிவில் ஒரு முதுநிலை

கூடுதல் இயக்குநரும் இயக்குநர் அவர்களுக்கு நிர்வாக பணியில் உதவி வருகின்றனர்.

தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப்பிரிவில் சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய ஐந்து இடங்களில் கூடுதல் இயக்குநர் தலைமையில் மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆய்வு எல்லைகள் வரையறுக்கப்பட்டு மாநிலம் முழுவதும் 25 இணை இயக்குநர்கள் உள்ளனர்.

கட்டிடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப்பிரிவில் சென்னை மற்றும் மதுரையில் இணை இயக்குநர் தலைமையில் மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களை ஆய்வு எல்லையாகக் கொண்டு 8 துணை இயக்குநர்கள் உள்ளனர்.

## 2.2. தொழிற்சாலைகள் சட்டம், 1948

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், சுகாதாரம் மற்றும் நல வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை இச்சட்டத்தின் முக்கிய

நோக்கமாகும். இச்சட்டமானது தொழிலாளர்கள் இயந்திரங்களில் பணிபுரியும் போது பாதுகாப்பை நல்குவதுடன் பணிநிலைமைகளை மேம்படுத்தி தொழிலாளர்களுக்கு பணியிட பாதுகாப்பை அளித்து வருகிறது.

### 2.3. கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம், 1996

இச்சட்டம் கட்டுமான தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்துவதுடன் அவர்களது பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்து வருகிறது. பத்து மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை பணியமர்த்தும் கட்டிடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்கள் மற்றும் ரூபாய் பத்து இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பிலான கட்டுமானங்கள் இச்சட்டத்தின் வரையறைக்குட்படும்.

### 2.4. சிறப்பு திட்டங்கள்

#### 2.4.1. சுயசான்று வசதியுடன் கூடிய எளிதாக்கப்பட்ட ஆய்வு திட்டம்

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும்

தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் தொழிற்சாலைகள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கட்டுமானத்தின் தன்மையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**2.4.1.1. அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்**

அனைத்து பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள், **100** தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 87 மற்றும் விதி **95–ன்** கீழ் வகைபடுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு **2(cb)–ன்**

அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**2.4.1.2. நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்**

நூறு தொழிலாளர்கள் வரை பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு **87** மற்றும் விதி **95**–ன் கீழ் வகைபடுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு **2 (**cb**)**–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் **250** தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை அல்லாத தொழிற்சாலைகள் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**2.4.1.3. குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்**

இதர அனைத்து தொழிற்சாலைகளும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன.

**2.4.1.4. அதிக அபாயகரமான கட்டுமானங்கள்**

கட்டுமான பணியிடங்களில் 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமான பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

**2.4.1.5. நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்**

இரண்டிலிருந்து ஐந்து தளங்கள் வரை கொண்ட கட்டுமானங்கள் மற்றும் 50 முதல் 500 தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் இவ்வகைப்பாட்டிற்குள் வரும்.

**2.4.1.6. குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்**

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்த இடர் அளவீட்டின் படியான கணினி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டுமான நிறுவனங்கள் வருடத்திற்கு ஒரு முறையும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டுமான நிறுவனங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டுமான நிறுவனங்கள் ஐந்து / மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

எளிதாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறையை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆய்வு முறையில் கீழ்காணும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

1. ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை / கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலை / கட்டுமான நிறுவனத்தை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

**3.** அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை ஆய்வு முடிந்த **24** மணிநேரத்திற்குள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை / கட்டுமான நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டிடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்கள் மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டிடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டிடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் / கட்டிடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்கள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்கள் / மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

**2018–2019**–ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் **20,652** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின்

பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

**2018–2019–**ஆம் ஆண்டில், **1,648** கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு **1,392** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.4.2. இணைய வலைதளம்

முதலீட்டாளர்களுக்கு இணக்கமான சூழலை அளிக்கவும் தொழில் தொடங்கும் திட்டங்களை எளிதாக்குவதற்கும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வலைதளம் மூலம் பொதுமக்கள் இவ்வியக்கக சேவைகளை எளிதாக பெறவும் தங்கள் தேவைகளுக்காக நேரிடையாக அணுகுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் பல்வேறு சேவைகள்/ ஒப்புதல்களை இவ்வலைதளத்தின் வழியாக பெற இயலும். இவ்வலைதளம் (URL:https://dish.tn.gov.in) மூலம் கீழ்கண்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

- தொழிற்சாலைகள் சட்டம், **1948–**ன் கீழ் உரிமம் வழங்குதல்.

- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் உரிமம் புதுப்பித்தல்.
- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம் 1996–ன் கீழ் கட்டுமான நிறுவனங்களுக்கு பதிவு சான்று வழங்குதல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் பதிவுச்சான்று மற்றும் உரிமம் வழங்குதல்.
- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் பதிவுச்சான்று மற்றும் உரிமம் வழங்குதல்.
- ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்.

### 2.4.3. எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனத்தினர் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பல படிவங்களில் ஆண்டறிக்கைகளை பல்வேறு காலங்களில் சமர்ப்பித்து வந்தனர். இந்நிறுவனங்களின் சுமையைக் குறைக்கவும் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதை எளிதாக்கவும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 100–ல் படிவம் எண்.22 / தமிழ்நாடு

கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) விதி 242 அட்டவணை XIII-ல் படிவம் XXV-ல் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையாக தொழிற்சாலைகள் / கட்டுமான நிறுவனங்கள் வலைதளம் வழியாக சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**2.4.4. பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட வேண்டிய எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

முன்னதாக பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் அதிக எண்ணிக்கையில் பதிவேடுகள் பராமரிக்க வேண்டியிருந்தது. இதனால் குறிப்பாக சிறிய தொழிற்சாலை நிர்வாகத்தினரின் நிர்வாக செலவினம் அதிகமாக இருந்தது. எனவே தற்போது பராமரிக்கப்பட்டு வரும் 27 பதிவேடுகளை 4 பதிவேடுகளாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.4.5. நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம் (Online Monitoring Centre)

வளர்ந்து வரும் தொழிற்துறைகளில் புதிய இரசாயனங்கள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுவதால் அவற்றிலிருந்து வெளிப்படும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அடர்த்தியைக் கண்காணிப்பது அவசியமாகிறது. இதற்கென தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஒரு இணைய கண்காணிப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அடர்த்தி, நிகழ்நேர மதிப்பீட்டின்படி இணையதளம் மூலம் இக்கண்காணிப்பு மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. இக்கண்காணிப்பு மையத்துடன் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு அத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் நிகழ்நேர மதிப்பீட்டின்படி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 2.4.6. பல்வகை வாயு பகுப்பாய்விகள்

அதிக நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனங்களின் அடர்த்தி அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக (Threshold Limit Value) வெளிப்படும் அபாயம் நிறைந்த ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய இவ்வியக்கக அலுவலர்கள் தொழிற்சாலை ஆய்வுகளின் போது நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களின் அடர்த்தியை பல்வகை வாயு பகுப்பாய்விகள் மூலம் அளவிடுகின்றனர்.

## 2.5. இதர செயல்பாடுகள்

### 2.5.1. பெருவிபத்து இடர்தரு தொழிற்சாலைகளில் முன்மாதிரி ஒத்திகைகள்

ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், **1989**, அட்டவணை **3**–ல் குறிப்பிட்டுள்ள இரசாயனங்களை அதிகபட்ச அளவுக்கு மேல் சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெருவிபத்து இடர்தரு தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் **31.03.2019** வரை

157 தொழிற்சாலைகள் பெருவிபத்து இடர்தரு தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களை உற்பத்தி செய்தல், சேமித்தல் மற்றும் உபயோகப்படுத்துதல், தொழிற்சாலை மற்றும் அதன் அருகில் உள்ள பொது மக்கள் மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஊறுவிளைவிக்க ஏதுவாகும். எளிதில் தீப்பற்றக்கூடிய, வெடிக்கும் தன்மை வாய்ந்த மற்றும் நச்சு தன்மையுடைய இரசாயனங்கள் எதிர்பாராமல் வெளியேறும் போது அவசர நிலையினை உருவாக்குகிறது. அவ்வாறு வெளியேறும் இரசாயனங்களின் தன்மை மற்றும் அதன் அளவினைப் பொறுத்து, தொழிற்சாலையின் வளாகத்திற்குள் கட்டுப்படுத்தும் அவசரநிலை, உள்வளாக அவசர நிலை எனப்படும். அவ்வாறு கட்டுப்பாடின்றி தொழிற்சாலை வளாகத்தினை விட்டு வெளியேறி அதன் அருகிலுள்ள பொது மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் அவசரநிலை வெளிவளாக அவசர நிலை எனப்படும்.

அவசர காலகட்டத்தில் ஏற்படக்கூடிய நடைமுறை பிரச்சினைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டு, உள்வளாக அவசர நிலை முன் மாதிரி ஒத்திகைகள் 6 மாத

காலத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. வெளிவளாக அவசர நிலை முன்மாதிரி ஒத்திகைகள் மாவட்ட அவசர நிலை அலுவலரான மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டில், 119 உள்வளாக மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.5.2 மனை மதிப்பீட்டுக்குழு

ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளின் துவக்க நிலையிலும் அதன் விரிவாக்கத்தின் போதும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்புகள் தொடர்பாக மதிப்பிடும் பொருட்டு, தொழிற்சாலைகள் சட்டம், 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987)–ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு மனை மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இம்மனை மதிப்பீட்டுக்குழு 2018–2019–ஆம் ஆண்டில் 16 விண்ணப்பங்களை மதிப்பீடு செய்துள்ளது.

### 2.5.3. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அதிக வெடிக்கும் தன்மை வாய்ந்தவையாக

உள்ளதால், அத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வழிமுறைகளை மேலும் தீவிரமாக அமல்படுத்த தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டாசு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு காலமுறை ஆய்வு செய்யப்பட்டு பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான செயல்முறைகள் மற்றும் கையாளும் வழிமுறைகள் குறித்து கற்றுத் தரப்படுகிறது.

பண்டிகை காலங்களில் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்கள் அதிகம் நிகழும் அபாயம் உள்ளதால் பிற ஆய்வு எல்லையில் உள்ள இணை இயக்குநர்களைக் கொண்டு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டில் தீபாவளி பண்டிகையின் போது 529 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018–2019–ஆம் ஆண்டில் முரண்பாடுகள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 406 வழக்குகள் தொடரப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.76,48,300/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ரூ.18.00 இலட்சம் செலவில் மூன்று பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின் போது நடமாடும் பிரச்சார வாகனத்தில் திரையிட்டு காட்டப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் கூடுதல் முனைப்புடன் பாதுகாப்பு வழிமுறைகளை அமல்படுத்தவும் பாதுகாப்பான பணிச் சூழலை உறுதிப்படுத்தவும் விருதுநகர் மாவட்டத்தில் கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு நடமாடும் கண்காணிப்புக்குழு பிரத்தியேகமாக பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ள உருவாக்கப்பட்டது. இக்குழு தொழிலாளர்களது பணி பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கிறது. 2018–19–ஆம் ஆண்டில், 92 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நிர்வாகத்தினர் மீது 5 வழக்குகள் தாக்கல்

செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.85,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 2.5.4. பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

2011–ஆம் ஆண்டில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன் / மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு சிவகாசியில் பயிற்சி மையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி மையத்தில் இரசாயனங்களை பாதுகாப்பாக கையாளுவது குறித்தும் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பான செயல்முறைகள் குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் இதுவரை 37 குழுக்களுக்கு ஒரு மாத கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 990 ஃபோர்மேன்கள் பயனடைந்துள்ளனர்.

2018–2019–ஆம் ஆண்டில், 50 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 4,255 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**2.5.5. தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பயன்களை மேலும் நீட்டிக்க தமிழக அரசால் தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது. இந்த நிவாரணமானது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் (E.S.I. Scheme) அல்லது பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்களுடன் கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

ஒவ்வொரு ஆண்டிற்கும் தவணைத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு தொழிலாளியின் சார்பாக அத்தொகையினை செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. தற்போது, தி நியூ இந்தியா அஷூரன்ஸ் நிறுவனம், திருத்தங்கல் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசு

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான காப்பீடு புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### 2.5.6. உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார செயல்பாடுகள் ஒன்றோடொன்று சார்ந்ததாகும். அபாயகரமான பணி மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல்நலத்தினைக் கண்காணிக்க ஒரு மருத்துவப் பிரிவு இவ்வியக்ககத்தில் செயல்படுகிறது. இம்மருத்துவப் பிரிவு காலமுறைப்படி தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு மருத்துவ அலுவலரும் PFT இயந்திரத்தின் உதவியுடன் சிலிக்கா துகள்களால் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கும் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்து அவர்களுக்கு நிமோகோனியாசிஸ் பாதிப்பு உள்ளதா என அறியப்படுகிறது. மருத்துவ பரிசோதனையின் மூலம் நிமோகோனியாசிஸ் பாதிப்பு அறிகுறிகளுடன் அசாதாரண அறிகுறிகள் காணப்பட்டால் அவர்களை அவ்விடத்தில் தொடர்ச்சியாக பணியில் ஈடுபடுத்தாமல் சுழற்சி முறையில்

பணி வழங்கப்பட்டு தூசுகளின் தொடர் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

மேலும், இரைச்சல் அதிகமுள்ள பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களது காது கேட்கும் திறனை பாதுகாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் பணியில் சேர்வதற்கு முன்னரும் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரையிலும் அவர்களது காது கேட்கும் திறன் வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

2018–19–ஆம் ஆண்டில் அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 79,334 தொழிலாளர்களுக்கும் உணவகங்களில் பணிபுரியும் 20,385 தொழிலாளர்களுக்கும் மருத்துவ சான்றிதழ்கள் மருத்துவ அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 26,970 வளரிளம் பருவத்தினருக்கு உடல் தகுதி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 2.5.7. பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

இவ்வியக்ககத்தின் முக்கிய பணிகளான பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகளின் கீழ் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் மற்றும் பாதுகாப்பு ஒத்திகை ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2018–19**–ஆம் ஆண்டில், இக்குழுக்களால் **53** பாதுகாப்பு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு **2,343** நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. **2018–19**–ஆம் ஆண்டில், **490** பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு **29,834** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பினை மேம்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு, பாதுகாப்பு கருத்தரங்குகளை நடத்தி வரும் தேசிய பாதுகாப்பு குழுமம், தேசிய உற்பத்தி குழுமம் போன்ற பிற அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் அனைத்து தரப்பு

தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. **2018–19–**ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட **8** கருத்தரங்குகளால் **2,208** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

கட்டுமான பணியிடங்களில் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாதமும் தலா இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. பெரும்பாலான பிற மாநில தொழிலாளர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாகவும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாதவர்களாகவும் இருப்பதால் அவர்களது தாய்மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பாதுகாப்பு குறும்படங்கள், முன்மாதிரி வடிவங்கள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் ரூ.**15.00** இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு, கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பிற்கு உதவும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**2018–19–**ஆம் ஆண்டில், **5,215** தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் **68** பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.5.8. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படவில்லை எனில் அவை வெடிக்கும் அபாயம் உள்ளதால் அவைகளின் பாதுகாப்பான செயல்பாட்டினை இவ்வியக்ககம் உறுதி செய்கிறது. இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வளி மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனைக்கும் ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனைக்கும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனைக்கும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனைக்கும் இவ்வியக்கக அலுவலர்களால் உட்படுத்தப்படுகின்றன. **2018–19**–ஆம் ஆண்டில் மொத்தம் **1,52,997** வெளிப்புற, **2,131** உட்புற, **21,696** நீர் அழுத்த மற்றும் **8,494** நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.5.9. மாநில பாதுகாப்பு விருதுகள்**

தொழிற்சாலை நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதில் போட்டி மனப்பான்மையை ஊக்கப்படுத்தவும் தனித்துவமான பாதுகாப்பு செயல்திறன் கொண்ட நிர்வாகத்தினரை அங்கீகரிக்கவும் மாநில அளவிலான பாதுகாப்பு விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பிரிவுகளின் கீழ் விபத்து குறைப்பில் திறம்பட செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு வெள்ளி கேடயங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

**2.5.10. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்**

நிரூபிக்கப்பட்ட புதுமையான முயற்சிகள் மூலமாக உற்பத்தி திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதில் தனித்துவமான பங்களிப்பினை வழங்கிய தொழிலாளர்களை அங்கீகரிக்கும் விதமாக தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் பங்குபெற ஏதுவாக விருதுகளின் எண்ணிக்கை **23–**லிருந்து **43** ஆக **2012–**ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

## 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை

### வேலைவாய்ப்பு பிரிவு


தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக புதிய மாற்றம் பெற்றுள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தற்போது வேலைநாடுநர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைநாடுநர்களை பதிவு செய்வதோடு வேலையளிப்பவர்களால் அறிவிக்கை செய்யப்படும் பணி காலியிடங்களுக்கு அவர்களின் தேவைகளுக்கேற்ப கல்வித்தகுதி, வயது, பதிவு மூப்பு மற்றும் இனசுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில் பெயர்களை பரிந்துரை செய்கின்றன. மேலும் தனியார் துறை வேலையளிப்பவர்கள், தங்கள் மனித வள தேவைகளைப் பூர்த்தி செய்ய பொருத்தமானவர்களை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பினைப் பெறும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைவாய்ப்பு முகாம்களை தொடர்ந்து நடத்துகின்றன.

## 3.1. வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆகிய இரு பிரிவுகளுக்கும் துறையின் ஆணையர் தலைமை வகிக்கிறார். ஆணையருக்கு உதவியாக வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் ஆணையரகத்தில் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) மற்றும் இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய இரு இணை இயக்குநர்கள், நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், நான்கு உதவி இயக்குநர்கள் மற்றும் ஆறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

வேலைவாய்ப்பு பிரிவின் அனைத்து சார்நிலை அலுவலகங்களும் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி என நான்கு மண்டலங்களுக்குள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய மண்டலங்களுக்குட்பட்ட சார்நிலை அலுவலகங்களின் பணிகளை இம்மண்டலங்களிலுள்ள மண்டல இணை இயக்குநர்கள் (வேலைவாய்ப்பு) கண்காணிக்கின்றனர். வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் **34** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், **2** தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், ஒரு மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், ஐந்து ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகங்கள் மற்றும் ஒரு பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம் என மொத்தம் 43 சார்நிலை அலுவலகங்கள் செயல்படுகின்றன.



**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள்**

- மனுதாரர்களை இணையதளம் வாயிலாக பதிவு செய்தலுடன் புதுப்பித்தல் மற்றும் விவரங்களை முழுமைப்படுத்துதல்.
- வேலையளிப்பவர்களுக்கு மனுதாரர்களை பரிந்துரைத்தல்.
- இளைஞர்களுக்கு தேவையான தொழில் நெறி வழிகாட்டுதல்.
- போட்டித் தேர்வுகளில் பங்கேற்பவர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்.
- நல்ல நூலகங்களுடன் கூடிய தன்னார்வ பயிலும் வட்டங்களைப் பராமரித்தல்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.
- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்தல் மற்றும் வழிகாட்டுதல்.
- திறன் பயிற்சிக்கு பதிவு செய்தல் மற்றும் வழிகாட்டுதல்
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்நெறி விழிப்புணர்வு, திறன் விழிப்புணர்வு மற்றும் தொழில்நெறி உரைகள் வழங்குதல்.

- தனியார் துறைகளில் வேலைநாடுநர்களை பணியமர்த்த வேலைவாய்ப்பு முகாம்கள்.

- திறன் பயிற்சி தேவைப்படும் இளைஞர்களுக்கு திறன் முகாம்கள் நடத்துதல்.

- வேலைநாடுநர்கள் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெற உதவும் மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் உதவி பிரிவு.

- வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் உள்ள வேலைவாய்ப்பற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை வழங்குதல்.

- வேலை நிலவர தகவல் தொடர்பிலான புள்ளி விவரங்களை சேகரித்தல் மற்றும் தொகுத்தல்.

- மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் (Virtual Learning System Portal) பதிவு செய்துள்ள மாணாக்கர்களுக்கு மின்–பொருளடக்கம் மற்றும் பாட குறிப்புகள் அளித்தல்.

## 3.2. துறையின் இணையதளம் வழியாக பதிவு செய்தல் www.tnvelaivaaippu.gov.in

**2011**–ஆம் ஆண்டில் துறைக்கான வலைதளம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, **12**–ஆம் வகுப்பு மற்றும் **10**–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களை அணுகாமல் பள்ளி வளாகங்களிலேயே

வேலைவாய்ப்பிற்கான பதிவை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து 2018–ஆம் ஆண்டு வரை, துறையின் இணையதள பதிவின் வாயிலாக 93,80,120 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**உயிர் பதிவேடு விவரங்கள்**

| விவரங்கள் | பதிவுதாரர்கள் |
|---|---|
| 18 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்கள் | 17,41,402 |
| 18 முதல் 23 வயதிற்குட்பட்ட உயர்கல்வி மேற்கொள்ளும் மாணவர்கள் | 16,93,351 |
| 24 முதல் 35 வயதிற்குட்பட்ட வேலைநாடுநர்கள் | 27,41,521 |
| 35 முதல் 58 வயதிற்குட்பட்ட அரசு பணி பெற விரும்பும் பதிவுதாரர்கள் | 11,29,429 |
| 58 வயதினை கடந்தவர்கள் | 6,687 |
| 31.03.2019–ல் உயிர் பதிவேட்டின் படி மொத்த எண்ணிக்கை | 73,12,390 |

## 3.3. தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகள்

### 3.3.1. பதிவுதாரர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு வழிகாட்டுதல்

- பல்வேறு வேலைவாய்ப்புகள் குறித்த தகவல்கள்.
- போட்டித்தேர்வுகளுக்கு தயாராவதற்கான வழிகாட்டல்.
- திறன் பயிற்சிக்கு பதிவு செய்தல்.

- அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு மேற்கொள்ளுதல்.
- சுயவேலைவாய்ப்பிற்கான வழிகாட்டுதல்.
- பதிவுதாரர்களுக்கு தனிநபர் வழிகாட்டுதல்.
- ஒத்த தன்மையுடைய குழுக்களுக்கு குழு வழிகாட்டுதல்.
- கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி உரைகள் மற்றும் தொழில்நெறி கருத்தரங்குகள் நடத்துதல்.
- தொழில் நெறி சிற்றேடுகள் விநியோகித்தல்.
- கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டுதலை வெளி நிகழ்ச்சிகளாக நடத்துதல்.
- நலிவடைந்த பிரிவினருக்கு ஆலோசனைகளுடன் கூடிய தொழில்நெறி வழிகாட்டுதல்.

### 3.3. 2. தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள்

மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தொழில்நெறி தொடர்பிலான பல்வேறு வாய்ப்புகள் குறித்த விவரங்கள் சீரிய முறையில் எடுத்தியம்பும் வகையில், கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி கண்காட்சிகள் இத்துறையால் நடத்தப்படுகின்றன. உயர்கல்வி, கிடைக்கப்பெறும் உதவித்தொகைகள், வேலைவாய்ப்புகள், திறன் பயிற்சி, தொழில் பழகுநர் பயிற்சி

போன்ற பல்வேறு தகவல்கள் அடங்கிய விளக்கப்படங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகளில் நடத்தப்படும் கருத்தரங்குகளில், மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர்நிலை பதவியில் உள்ள அலுவலர்கள் போன்ற முக்கிய பிரமுகர்கள் தொழில்நெறி உரையாற்ற அழைக்கப்படுகின்றனர். இக்கண்காட்சிகளை நடத்த ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– வீதம் ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கும் அரசு ஒதுக்கீடு செய்கிறது. 2018–19–ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் 32 தொழில் நெறி கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**3.4. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் தன்னார்வ பயிலும் வட்டங்கள்**

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், இரயில்வே தேர்வு வாரியம், ஆசிரியர் தகுதித் தேர்வு போன்ற போட்டித் தேர்வுகளின் வழியாக அரசு மற்றும் பொதுத்துறையில் பணி பெற விழையும் வேலைநாடுநர்களுக்கு உதவுவதற்காக 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தன்னார்வ

பயிலும் வட்டங்கள் வேலைவாய்ப்பு பிரிவால் நிறுவப்பட்டுள்ளன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள் அனைத்தும் மேம்படுத்தப்பட்ட நூலகங்களைக் கொண்டுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களால் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் அனைவருக்கும் அந்தந்த பாடப்பிரிவுகளுக்கான சிறந்த ஆசிரியர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு தொடர் பயிற்சி வகுப்புகளை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நடத்துகின்றன. தன்னார்வ பயிலும் வட்டங்களில் படித்து வெற்றிகரமாக தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள இருப்பவர்களுக்கு ஊக்குவிக்கும் உரைகள் ஆற்றப்படுகின்றன. போட்டித் தேர்வுகளை எதிர்கொள்பவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் மாதிரி தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்களும் துறை அலுவலர்களால் நடத்தப்படுகின்றன.

**2018–19–**ஆம் ஆண்டில் **1,483** பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், போட்டித் தேர்வினை எதிர்கொள்ளும் **23,430** நபர்கள் பதிவு செய்து பயன் பெற்றுள்ளனர். இவர்களில் **881** போட்டியாளர்கள் அரசு / பொதுத்துறைகளில் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

## 3.5. கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்

பத்து பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு, கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்த போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் இத்துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசால் ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் தொகை ரூ.50.00 இலட்சமானது, ஒவ்வொரு பல்கலைக்கழகம் / கல்லூரிக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் பிரித்தளிக்கப்படுகிறது. 2018–19–ஆம் நிதியாண்டில், மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் ஆகிய போட்டித் தேர்வுகளுக்காக நடத்தப்பட்ட 938 வகுப்புகளில் 26,923 மாணவர்கள் பதிவு செய்து கொண்டனர். இம்மாணவர்கள் அனைவருக்கும் தேவையான பாடக்குறிப்புகள் அளிக்கப்படுவதுடன், அவற்றை மின்–பொருளடக்கமாக துறையின் வலைதளத்திலிருந்து

எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

**3.6. தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம்**

அரசின் ஆணையின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தில் **2–**வது வாரமானது தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரமாக **32** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படும் போது பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- தொழில்நெறி ஆலோசனைகள்
- தொழில்நெறி உரைகள்
- தொழில்நெறி கண்காட்சிகள்
- தொழில்நெறி கருத்தரங்குகள்
- தொழில்நெறி மற்றும் திறன் பேரணிகள்
- நடமாடும் ஊர்திகள் மூலம் தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு
- ஆசிரியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சி

- தொழில்நெறி தொடர்பான புத்தகங்கள் மற்றும் சிற்றேடுகள் விநியோகித்தல்

**3.7. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டல்**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி **10**–ஆம் வகுப்பு, **12**–ஆம் வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களின் நலனுக்காக சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் விடுதி வளாகத்திலேயே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகின்றன.

**2018–19**–ஆம் நிதியாண்டில் **1,343** பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் **(1,112** பள்ளி விடுதிகள் மற்றும் **231** கல்லூரி விடுதிகள்**)** தொழில்நெறி வழிகாட்டுதல் வழங்கப்பட்டு அதன் மூலம் **21,728** மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.8. தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள் வெளியிடுதல்

இத்துறையின், செயல்பாடுகளை விளக்குவதோடு பல்வேறு தொழில் நெறி வாய்ப்புகள் குறித்த தகவல்களையும் கொண்ட ‘திறன் தமிழகம்’ என்னும் காலாண்டு இதழினை வேலைவாய்ப்பு பிரிவு, நவம்பர் **2016** முதல் வெளியிட்டு வருகிறது.

### 3.8.1. தொழில்நெறி வழிகாட்டும் புத்தகங்களின் வரிசையில்

- ‘10–ஆம் வகுப்புக்கு பிறகு? ’
- ‘12–ஆம் வகுப்புக்கு பிறகு? ’
- ‘ஐ.டி.ஐ – க்கு பிறகு? ’
- ‘பட்டய படிப்பிற்கு பிறகு? ’

ஆகிய தலைப்புகளில் புத்தகங்கள் வெளியிடப்பட்டு, அவை துறையின் www.tnvelaivaaippu.gov.in வலைதளத்தில் மின்–புத்தகங்களாகவும் பதிவேற்றப்பட்டுள்ளன.

**2018**–ஆம் ஆண்டில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் ‘முதல் தர உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் முதுநிலை பட்ட படிப்புகள் மற்றும்

முதுநிலை பட்டய படிப்புகள் – ஒரு பார்வை' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

### 3.9. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள்

சென்னை, கிண்டியிலுள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென பிரத்தியேகமாக ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் இல்லாத மாவட்டங்களில், சிறப்பு பிரிவுகள் உருவாக்கப்படும் என 2018–19–ஆம் ஆண்டின் வரவு செலவு கூட்டத் தொடரில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி 18 மாவட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அவை 03.12.2018 முதல் செயல்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிவதும் அவர்கள் வேலைவாய்ப்பு பெற சிறப்பு உதவிகள் புரிவதுமே இப்பிரிவுகளின் நோக்கமாகும். ஜனவரி 2018 முதல் மார்ச் 2019 வரை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட பணி நியமனங்கள் தனியார் துறையில் மொத்தம் 1,456 மற்றும்

பொதுத்துறையில் மொத்தம் 170 ஆகும். 2011 முதல் மார்ச் 2019 வரையிலான காலகட்டத்தில் பொதுத்துறையில் 3,954 மாற்றுத்திறனாளிகளும், 2014 முதல் மார்ச் 2019 வரையிலான காலகட்டத்தில் தனியார் துறையில் 3,521 மாற்றுத்திறனாளிகளும் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

### 3.10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிக அளவில் காணப்படும் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் போட்டித்தேர்வுகளுக்கு பயிற்சி அளித்தலின் மூலம் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. தொழில் நெறி வழிகாட்டுதலுடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் உரிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் தொழில்நெறி

முன்னேற்றத்திற்காகவும் அவர்களை வேலை பெறுபவர்களாக மேம்படுத்தும் வகைகளிலும் இம்மையங்கள் பயிற்சிகளை வழங்குகின்றன. இப்பணிகளை மேற்கொள்ள ஐந்து தொழில் நெறி வழிகாட்டும் மையங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.20.46 இலட்சம் அரசால் வழங்கப்படுகிறது.

### 3.11. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்களைப் போன்றே பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஒன்று உதகமண்டலத்தில் செயல்பட்டு வருகிறது. தொலைதூர இடங்களில் அமைந்துள்ள பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்கு தொழில்நெறி வழிகாட்டும் அலுவலர் நேரில் சென்று குறிப்பிட்ட காலங்களில் தொழில்நெறி வழிகாட்டும் உரைகளை வழங்குகிறார். மேலும், மலைப்பிரதேசங்களில் வசிக்கும் பழங்குடியினரிடம் நேரில் சென்று தலத்திலேயே வேலைவாய்ப்பு பதிவை மேற்கொள்ளும் பணியும் இம்மையத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

## 3.12. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டங்கள்

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, உயிர்ப் பதிவேட்டில் 5 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்கும் பதிவுதாரர்களுக்கு வேலை பெறுவதற்கு உதவும் வகையில், வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை மூன்று ஆண்டுகளுக்கு, வயது மற்றும் வருமானம் போன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு உட்பட்டதாகவும், அதிகபட்ச வயது வரம்பு 40 ஆகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவினராக இருப்பின் வயது வரம்பு 45 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலாண்டிலும் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. வேலை வாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை பிப்ரவரி 2017 முதல் இருமடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு பிரிவால், மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உயிர்ப்பதிவேட்டில்

பதிவு செய்து ஓராண்டிற்கு மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகள் வயது மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற எந்தவித நிபந்தனைகளும் இன்றி இவ்வுதவித்தொகையைப் பெறலாம். மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையானது 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

**கல்வித்தகுதி வாரியான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை**

| வ. எண் | கல்வித்தகுதி | பொதுப் பிரிவினருக்கு (ரூ. மாதம் ஒன்றுக்கு) | மாற்றுத்திறனாளி களுக்கு (ரூ. மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | எழுதப்படிக்கத் தெரிந்தவர் | --- | 600 |
| 2 | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் | 200 | 600 |
| 3 | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் | 300 | 600 |
| 4 | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் | 400 | 750 |
| 5 | பட்டதாரிகள் | 600 | 1000 |

**2018–19–ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள்**

| வ. எண் | பிரிவினர் | செலவிடப்பட்ட தொகை (ரூ.) | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | பொது | 29.46 கோடி | 56,236 |
| 2. | மாற்றுத்திறனாளிகள் | 20.06 கோடி | 21,662 |

## 3.13. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் மற்றும் பிற வேலைநாடுநர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் தொடர்பான தற்போதைய தொழில்நுட்பம் மற்றும் நவீன வசதிகளைப் பயன்படுத்தி வெளிப்படைத் தன்மையுடன் தொழில்நெறி வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.

மத்திய அரசின் நிதி உதவியுடன் வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம், திருநெல்வேலி,

திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் கூடுதலாக ஆறு மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்களை அமைக்க புது தில்லி, மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சகம் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

**3.14. பொதுத்துறை பணியமர்த்தல்**

**2011** முதல் **2019** வரையிலான காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் அரசு மற்றும் பொதுத்துறையில் **89,755** வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றுள்ளனர். ஜனவரி **2018** முதல் மார்ச் **2019** வரை மொத்தமாக **3,948** வேலைநாடுநர்கள் பொதுத்துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

**3.15. தனியார் துறை பணியமர்த்தல்**

அனைத்து **37** வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தனியார் துறை பணி நியமனங்களை அதிகரிப்பது மற்றும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு தனியார் துறை பணியமர்த்தல் உதவி பிரிவுகள் **2012**–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. இத்தனியார் துறை பணியமர்த்தல்

பிரிவுகள், வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்களை ஒரே தளத்தில் கொண்டு வந்து தங்களது தேவைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்து கொள்ள உதவுகின்றன. வேலையளிப்பவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் சந்தித்துக் கொண்டு தகுதியானவர்களைத் தேர்வு செய்து கொள்ளும் வகையில் பல்வேறு இடங்களில் சிறிய மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதில் வேலைவாய்ப்புத்துறை அதிக கவனம் செலுத்தி வருகிறது. வேலையளிப்பவர்கள் சிறந்த வேலைநாடுநர்களைத் தேர்வு செய்யவும் வேலைநாடுநர்கள் உகந்த வேலையை பெற்றுக்கொள்ளவும் இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் உதவுகின்றன. தேர்வு செய்யப்படாதவர்கள் தங்களது திறன் இடைவெளியைக் கண்டறிந்து தேவையான திறன் பயிற்சி பெற்றுக்கொள்ளவும் வேலைவாய்ப்பு முகாம்கள் உதவி புரிகின்றன. மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் உதவி பிரிவுகள், வேலைவாய்ப்பு அலுவலக வளாகங்களில் சரியான கால இடைவெளியில் வேலைவாய்ப்பு முகாம்களை ஏற்பாடு செய்கின்றன. தேசிய தொழில்நெறி பணியின் கீழ், **35** வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த ஓராண்டிற்கு மட்டுமான

உதவித்தொகையாக, **2017–18**–ஆம் ஆண்டில் ரூ.**2.80** கோடி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்களுக்கு தொடர்ந்து வாய்ப்பளிக்கும் வகையில் **2018** முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'வேலைவாய்ப்பு வெள்ளி' என அனுசரிக்கப்படுகிறது. சிறிய மற்றும் பெரிய வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் ஜனவரி **2018** முதல் மார்ச் **2019** வரை **85,756** வேலைநாடுநர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

**3.16. சிறப்பு முயற்சிகள்**

**3.16.1. மெய்நிகர் கற்றல் முறை: இணையதள வழி கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மின்–பொருளடக்கம், மின்–புத்தகங்கள்**

மெய்நிகர் கற்றல் வழி இணையதளமானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **22.02.2019** அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்தளமானது போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள இருக்கும் வேலைநாடுநர்களுக்கு மின்–கற்றல், மின்–பொருளடக்கம் மற்றும் மின்–புத்தகங்களுடன் இணைய வழி மெய்நிகர் கற்றல் ஆகியவற்றை உரையாடலுடன் கூடிய

காணொளி மூலம் வழங்குகிறது. போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் வாய்ப்பினை அதிகப்படுத்தும் வகையில் அவர்களது திறனை மேம்படுத்திக்கொள்ளவும் அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளவும் இந்த இணையதளம் உதவுகிறது. மேலும், தமிழில் தேர்வுகளை எதிர்கொள்பவர்களின் வசதிக்காக இவ்விணையதளத்தில் மின்–பொருளடக்கம் யாவும் தமிழிலும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதுவரை இவ்விணையதளத்தில் போட்டித்தேர்வினை மேற்கொள்ளும் 26,127 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

### 3.16.2. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் திறன் பதிவு மற்றும் வழிகாட்டுதலுக்கான சிறப்பு பிரிவுகள்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் திறன் பதிவு மேற்கொள்வதற்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அயல்நாட்டு வேலைவாய்ப்பினைப் பெற விரும்பும் வேலைநாடுநர்களில் சிலர் பதிவு செய்யாத உள்ளூர் முகவர்களை சில நேர்வுகளில் அணுகி அதனால் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படும் இச்சிறப்பு பிரிவுகள் அயல்நாட்டு

வேலைவாய்ப்பைப் பெற விரும்பும் வேலைநாடுநர்களுக்கு உரிய வழிகாட்டுதலை அளிப்பதுடன் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவு செய்யவும் உதவுகின்றன.

திறன் பதிவு பிரிவுகள் 32 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. தனிப்பட்டவர்களிடையே காணப்படும் திறன் இடைவெளியைக் கண்டறிந்து குறிப்பிட்ட திறன் பயிற்சியைத் தேர்ந்தெடுத்து அப்பயிற்சியை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்வதற்காக திறன் பயிற்சி பதிவினை திறன் இணையதளத்தில் மேற்கொள்ள திறன் பதிவு பிரிவுகள் உதவுகின்றன.

### 3.16.3. மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

மாநில அளவில் அனைத்து வேலைவாய்ப்பு பணிகளையும் மேம்படுத்தும் ஒருங்கிணைப்பு முகைமையான மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி 22 அன்று துவங்கி வைக்கப்பட்டது. சென்னை, கிண்டியில் மெய்நிகர் கற்றல் வகுப்பறை மற்றும் ஆலோசனைகள்

வழங்கும் வசதிகளுடன் இம்மையத்தினைத் தோற்றுவிக்க அரசால் ரூ.1.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:

1. திறன் மதிப்பீடு மற்றும் வேலைவாய்ப்புகளைக் கண்டறிதல்.
2. உரிய தொழிலைத் தேர்வு செய்ய ஆலோசனைகள் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்புடைய தகவல்களை வழங்கி இளைஞர்களின் விருப்பத்திற்கேற்றவாறு பணியை தேர்வு செய்ய உதவுதல்.
3. வலைதளம் மூலமாக வேலைநாடுநர்கள், நிறுவனங்கள் மற்றும் தனியார் பணியமர்த்தல் முகமைகளை ஒருங்கிணைக்கும் நிறுவனமாக செயல்படுதல்.
4. தனியார் நிறுவனங்களுக்காக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அனைத்து நிலைகளிலும் வெளிப்படைத் தன்மையோடு பணியமர்த்தம் செய்யும் முறையைப் பின்பற்றுதல்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் உருவாக்கப்பட்ட மெய்நிகர் கற்றல் இணையதளத்தை மாநில தொழில் நெறி வழிகாட்டும் மையம் பயன்படுத்திக் கொள்ளும். மேலும் பல்வேறு நிலைகளிலுள்ள வேலைநாடுநர்களை மதிப்பீடு செய்யவும் இம்மையம் உதவி புரியும். மத்திய அரசு

பணியாளர் தேர்வாணைய தேர்வுகளை எழுதுபவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதையும் இம்மையம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3.17. கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள்**

கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2018–19 வரவு செலவு கூட்டத்தொடரின் போது அறிவிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.194 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 19.12.2018 – ல் இதற்கென ரூ.3.75 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு அலுவலகங்களுக்கும் சொந்த கட்டிடங்கள் கட்டும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.18. சிறப்பு புதுப்பித்தல் சலுகை**

அரசால் 2011–ஆம் ஆண்டு முதல் 2016–ஆம் ஆண்டு வரை வேலைவாய்ப்பு பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை, அரசாணை

எண்.612, நாள் 25.10.2018–ன் வாயிலாக வழங்கப்பட்டது. இப்புதுப்பித்தல் சலுகை வாயிலாக 92,761 பதிவுதாரர்கள் பயனடைந்ததோடு அவர்களின் வேலைவாய்ப்பு பதிவின் பழைய மூப்பினை மீண்டும் விடுபாடின்றி பெற்றுள்ளனர்.

**3.19. துறையின் தனித்துவம் மிக்க முயற்சி: வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் 'ஒரு நாள் – ஒரு செயல்பாடு'**

வேலைவாய்ப்புத்துறையின் அனைத்து செயல்பாடுகளையும் நெறிப்படுத்த **'ஒரு நாள் – ஒரு செயல்பாடு'** என்ற தனித்துவம் மிக்க முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டது. வாரத்தின் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் வாலாய பணிகளுடன் அந்நாளிற்கென ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட செயல்பாட்டில் கவனம் செலுத்தப்படுகிறது.

இம்முயற்சியானது மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களிடையே மிகப்பெரிய அளவில் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் விளைவாக 'வேலைவாய்ப்பு வெள்ளி'யாக அனுசரிக்கப்படும் வெள்ளிக்கிழமைகளில் தனியார் துறை பணி

நியமனங்களுக்காக நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்பதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களை அணுகும் வேலைநாடுநர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தில் இருந்து அலுவலர்கள் குழு ஒன்று இச்சிறப்பு செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதற்காக கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வருகை புரிந்தனர்.

இந்த தனித்துவம் மிக்க முயற்சியின் மூலம் ஜனவரி **2018** முதல் மார்ச் **2019** வரை பயனடைந்தவர்களின் விவரங்கள் பின்வருமாறு

| **நாளுக்கான செயல்முறை கருத்து** | **அன்றைய தின செயல்பாடுகள்** | **பயனாளிகள்** |
|---|---|---|
| **திறன்மிகு திங்கள்** (திங்கள்) | திறன் முகாம், திறன் மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சிக்கான பதிவு | திறன் பயிற்சிக்காக **28,758** நபர்கள் பதிவு செய்துள்ளனர் |
| **சேவை செவ்வாய்** (செவ்வாய்) | தொழில்நெறி வழிகாட்டல், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல், ஆசிரியர் களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சி | **1,552** தொழில்நெறி உரைகள் நடத்தப்பட்டு **63,592** நபர்கள் பயனடைந்துள்ளனர் |

| | | |
|---|---|---|
| **போட்டித் தேர்வு புதன்** (புதன்) | போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மாதிரி தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் நடத்துதல் | **1,527** விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, **19,336** நபர்கள் பயனடைந்துள்ளனர். |
| **விழிப்புணர்வு வியாழன்** (வியாழன்) | குழு கலந்துரையாடல், தனிநபர் வழிகாட்டல், உளவியல் ஆய்வு | **32,618** வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பதிவின் போது வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. |
| **வேலைவாய்ப்பு வெள்ளி** (வெள்ளி) | அனைத்து பதிவுதாரர்களுக்கும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல், வேலைநாடுநர்கள், வேலையளிப்போர், பணி காலியிட விவரங்கள் மற்றும் புதிய வேலைவாய்ப்பு குறித்த விவரங்கள் சேகரித்தல். | **65,902** வேலைநாடுநர்களுக்கு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. |

## 3.20. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

'நீடித்த வளர்ச்சி இலக்கு 8' என்பது முழுமையான, ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான வேலையை, இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வழங்குவதுடன் சமவேலைக்கு சம ஊதியம் என்ற நிலையினை

2030–ஆம் ஆண்டிற்குள் எய்துவதையும் குறிக்கோளாகக் கொண்டதாகும். துறையின் வேலைவாய்ப்பு பிரிவானது, இவ்விலக்கினை ஒட்டியே வேலையின்மை விகிதத்தை அதிகபட்சமாகக் குறைக்க அனைத்து வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

வேலைவாய்ப்பு பிரிவானது தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள், தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள், தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் பயிற்சி வகுப்புகள், மெய்நிகர் கற்றல், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் ஒரு நாள் ஒரு செயல்பாடு என்ற தனித்துவ முயற்சி ஆகியவற்றின் மூலம் இயன்ற அளவில் அதிகபட்சமாக வேலையின்மையைக் குறைக்கும் ஒருமித்த நோக்கில் தனது நடவடிக்கைகளை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் மாநிலத்தின் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை வேலை பெறுபவர்களாக மாற்றுவதற்குத் தேவையான அனைத்து மார்க்கங்களும் இத்துறையின் வேலைவாய்ப்பு பிரிவால் கண்டறியப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## பயிற்சி பிரிவு

*"கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் தொடர்ந்து கற்றல் ஆகியவை வேலைவாய்ப்புத்திறன், தொழிலாளர்களை பணியமர்த்துதல் மற்றும் நீடிக்கும் தொழில் முனையும் மேம்பாடு ஆகியவற்றைத் தாங்கும் மைய தூண்கள் ஆகும்"*


***–சர்வதேச தொழிலாளர் அமைப்பு.***

வேலைவாய்ப்புக்கு தயாராக தொழிலாளர் தொகுதியை உருவாக்கிட ஏதுவாக இளைஞர்களுக்கு தேவையான திறன்கள் மற்றும் கல்வி அளிக்கப்பட வேண்டியுள்ளது. நன்கு பயிற்சி பெற்ற, தரமான தொழிலாளர்கள் இல்லாமை மற்றும் படித்த இளைஞர்களில் ஒரு பகுதியினர் வேலைவாய்ப்புகள் பெற இயலாமல் இருப்பது ஆகியவையே நம் நாடு எதிர்கொள்ளும் இரட்டை சவால்களாகும். ஆகவே, மாநிலத்தில் தொழிலாளர்களுக்கான தேவை மற்றும் அதனை வழங்குதல் ஆகிய இரு மட்டங்களிலும் திறன் மேம்பாடு இன்றியமையாததாக உள்ளது. தேவையின் சவாலை எதிர்கொள்ள பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்திடவும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளோடு திறன் பெற்ற மனிதவளத்தை உருவாக்குவதன் மூலம் வேலைவாய்ப்பு

மற்றும் பயிற்சித்துறையின் பயிற்சிப்பிரிவானது நமது மாநிலத்தின் தொழிலாளர் தேவையை சமாளித்து வருகிறது. தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற் பள்ளிகளின் மூலம் நீண்டகால பயிற்சிகள் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

## 3.21. நிறுவன அமைப்பு

துறையின் நிறுவன அமைப்பு பின்வருமாறு விளக்கப்படுகிறது.



செயல்படுத்தப்படும் முக்கியமான திறன் பயிற்சித் திட்டங்களாவன:

1. கைவினைஞர் பயிற்சித் திட்டம்
2. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்
3. தொழிற்பள்ளிகள்

### 3.22. கைவினைஞர் பயிற்சித் திட்டம்

இத்திட்டம் இந்திய அரசால் பகுதி–திறன் பெற்ற (Semi-skilled) மனிதவளத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்கும் நோக்கில் 1950–களில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக செயல்படுத்தப்படும் இத்திட்டம் இளைஞர்களிடையே வேலைவாய்ப்புத் திறனை வளர்க்க உதவுகிறது. வெற்றிகரமாக தொழிற்பயிற்சி முடித்தவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தினால் (NCVT) தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) நிர்ணயித்த சான்றிதழ் வழங்கப்படுகிறது.

#### 3.22.1. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

நம் மாநிலத்தில் உள்ள 87 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 55 பொறியியல் மற்றும் 28 பொறியியல் அல்லாத பிரிவுகளில் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் காலம் தொழிற்பிரிவுகளுக்கு

ஏற்றவாறு ஓராண்டு முதல் ஈராண்டு வரை வேறுபடுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேருவதற்கு 14 முதல் 40 வயது வரை உள்ளவர்கள் தகுதியுடையவர்களாவர். பெண்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு ஏதுமில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் பயிற்சிகள் தொடங்குகின்றன. நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி தகுதியின் அடிப்படையில் இணையவழி சேர்க்கை மாவட்ட அளவிலான கலந்தாய்வு வழியாக நடைபெறுகிறது. 2018–19–ஆம் ஆண்டில் 31,130 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர்.

**அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒரு பார்வை**

| வ. எண் | வகைப்பாடு | | எண்ணிக்கை | பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | பொது தொழிற்பயிற்சி நிலையங்கள் | : | 68 | 27,924 |
| 2. | ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் | : | 2 | 433 |
| 3. | பழங்குடி இனத்தினருக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் | : | 6 | 849 |
| 4. | மகளிருக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் | : | 10 | 1,782 |
| 5. | சிறைவாசிகளுக்கான தொழிற்பயிற்சி நிலையம் | : | 1 | 142 |
| | மொத்தம் | : | **87** | **31,130** |

நிதி ஆணையத்தின் ( NITI AAYOG ) நீடிக்கும் வளர்ச்சிக்கான இலக்குகளில் (Sustainable Development Goals) குறிப்பிடப்பட்டுள்ளவாறு 'கல்வியில் பாலின வேறுபாடுகளைத் தவிர்த்திடும் வகையிலும் பாதிக்கப்பட்டோர் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியின் எல்லா நிலைகளிலும் சமவாய்ப்புகளை உறுதி செய்யும் வகையிலும்' இத்துறையின் பயிற்சிப்பிரிவால் கீழ்காணும் முனைப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ பட்டியல் இனத்தைச் சேர்ந்த பயற்சியாளர்களின் நலனுக்காக இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் கடலூர் மாவட்டத்திலுள்ள சிதம்பரத்திலும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள வடகரையிலும் செயல்பட்டு வருகின்றன.

❖ பழங்குடியின பயற்சியாளர்களின் நலனுக்காக ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைக்கட்டி, சேலம் மாவட்டத்தில் கருமந்துறை, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜமுனாமரத்தூர், நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

❖ பெண்களின் மேம்பாட்டுக்காகவும் தொழில் முனைவோர் மற்றும் திறன் வளர்ச்சியில் பெண்

பயிற்சியாளர்களின் பங்களிப்பினை அதிகரிக்கவும் மகளிருக்கென 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் கிண்டி, அம்பத்தூர், கடலூர், புள்ளம்பாடி, கோயம்புத்தூர், சேலம், ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், மதுரை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் பிரத்தியேகமாக செயல்பட்டு வருகின்றன. இதை தவிர மகளிருக்கென ஆறு தனி பிரிவுகள் தஞ்சாவூர், ராமநாதபுரம், ஒசூர், பரமக்குடி, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இவற்றைத் தவிர, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் சேர்க்கையில் கீழ்கண்ட இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறது.

| வ.எண் | இனம் | இட ஒதுக்கீடு சதவீதத்தில் |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் | 15.3 |
| 2. | ஆதி திராவிடர் (அருந்ததியர்) | 2.7 |
| 3. | பழங்குடி இனத்தவர் | 1.0 |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | 20.0 |
| 5. | பின்தங்கிய வகுப்பினர் | 26.5 |
| 6. | பின்தங்கிய வகுப்பினர் (முஸ்லீம்) | 3.5 |

**3.22.2. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்**

மாநிலத்தில் திறன் படைத்த மனித வளத்தை உருவாக்குவதில் அரசுடன் இணைந்து தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட **476** தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் மொத்த ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகள் **79,922** ஆகும். **2018–19**–ஆம் ஆண்டில் மொத்தம் **39,801** பயிற்சியாளர்கள் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

**3.23. தொழிற்பயிற்சி நிலையங்களின் தரம்**

தமிழக அரசால் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் ஆதரவானது, இந்திய அரசால் நடத்தப்பட்ட தர ஆய்வில் நமது மாநிலத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் முன்னோடியாகத் திகழ்வதோடு அனைத்து மாநிலங்களின் வரிசையில் முதலிடம் பெறவும் வழிவகுத்துள்ளது. சமீப காலத்தில் இந்திய அரசால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களின் தர மதிப்பீட்டில் அகில இந்திய அளவில் **4,811** தொழிற்பயிற்சி நிலையங்கள் பங்கு பெற்று, **123** தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மட்டும் மூன்று நட்சத்திர மதிப்பீடு

வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 தொழிற்பயிற்சி நிலையங்கள் (நாட்டில் மிக அதிக எண்ணிக்கையில்) மூன்று நட்சத்திர மதிப்பீட்டைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் பெற்றுள்ள பிரதான நிலை வரைபடமாக இணைக்கப்பட்டுள்ளது.

### 3.24. பொது சேர்க்கை முறை

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் இணையவழி கலந்தாய்வு URL-www.skilltraining.tn.gov.in மூலம் நடைபெறுகிறது. தகுதியின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டு விதிகள் பின்பற்றப்பட்டு பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பினைப் பயன்படுத்தி விருப்பமான தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவை தேர்ந்தெடுக்கிறார்கள்.

## 3.25. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்படும் பயிற்சி கட்டணம்

இணையவழி கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு கிராமப்புற பகுதிகளில் ஒரு பயிற்சியாளருக்கு ரூ.10,000/– வீதத்திலும் நகர்புறங்களில் ஒரு பயிற்சியாளருக்கு ரூ.12,000/– வீதத்திலும் பயிற்சிக்கட்டணம் மாநில அரசால் வழங்கப்படுகிறது. 2018–19–ஆம் ஆண்டில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் மொத்தம் 7,184 பயிற்சியாளர்கள் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டு ரூ.10.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.26. தொழிற்பள்ளிகள்

மாநில திட்டத்தில் வரும் தொழிற்பள்ளிகள் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் கீழ் செயல்படுகின்றன. பயிற்சி காலம் ஓர் ஆண்டு முதல் மூன்று ஆண்டு வரையிலாக உள்ளது. 8–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆண்டுதோறும் ஜுன் மாதத்தில் பொதுத்தேர்வுகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறும் பயிற்சியாளர்களுக்கு

மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 2018–19–ஆம் ஆண்டில் 286 தொழிற்பள்ளிகளின் வாயிலாக 55 தொழிற்பிரிவுகளில் 14,369 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**3.27. அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளுக்கு மானியம்**

அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளுக்கு பயிற்றுநர்களின் சம்பளத்தில் 75 சதவிகிதம் மற்றும் முதலீட்டு மானியம் அல்லது கடந்த நிதி ஆண்டில் பயிற்சி நிலையத்தின் நிகர இழப்பில் 75 சதவிகிதம் இதில் எது குறைவோ அது அவர்களுக்கு பயிற்சி மானியமாக வழங்கப்படுகிறது. இப்பயிற்சி மானியம் 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் 10 தொழிற்பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 2018–19–ஆம் ஆண்டில் ரூ. 4.44 கோடி பராமரிப்பு மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

**3.28. பயிற்சியாளர்களை ஊக்குவித்தல்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு

கட்டணமில்லா பயிற்சி வழங்கப்படுவதுடன், கீழ்காணும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

1. பேருந்து பயணச் சலுகை
2. இரண்டு இணை சீருடைகள் மற்றும் ஒரு இணை காலணி
3. மிதிவண்டி
4. மாதந்தோறும் ரூ.500/– உதவித் தொகை
5. மடி கணினி
6. பாடப் புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்
7. செய்முறை பயிற்சிக்கான நுகர் பொருட்கள்
8. அடையாள அட்டை

**3.29. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு**

இத்திட்டத்தின் கீழ் நிலைய மேலாண்மைக்குழு சங்கங்களுக்கு தலா ரூ.2.50 கோடி நிதி இந்திய அரசால் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டு அதன் மூலம் 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில், 33 புதிய தொழிற்பிரிவுகள் 2,332 இருக்கைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.30. தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம்

திறனற்ற / பகுதி திறன் பெற்ற இளைஞர்களை முழுமையான திறன் பெற்ற மனிதவளமாக உருவாக்கும் மத்திய அரசின் திட்டங்களில் மற்றுமொரு பிரதான திட்டம் தொழிற்பழகுநர் பயிற்சி திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் நிறுவனங்களால் தொழிற்பழகுநர்களுக்கு நேரடி செய்முறைப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தொழிற்பழகுநர் சட்டம், **1961**–ன்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை ஆணையர் மாநில தொழிற்பழகுநர் ஆலோசகராக உள்ளார். மாநிலத்தில் உள்ள அரசு நிறுவனங்கள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் இத்திட்டத்தினை அமல்படுத்திடவும், கண்காணிக்கவும் அவருக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்களின் உதவி இயக்குநர்கள் மாவட்ட அளவில் இத்திட்டத்தினை அமல்படுத்தும் அதிகாரிகளாகவும் மண்டல இணை இயக்குநர்கள் (பயிற்சி) இணை தொழிற்பழகுநர் ஆலோசகர்களாகவும் செயல்படுகிறார்கள். இன்றைய தேதியில், **9,054** தொழிற்பழகுநர்கள் மாநிலத்தில் உள்ள **2,581** நிறுவனங்களில் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்தொழிற்பழகுநர்களுக்கு பகுதி திறன் பெற்ற

தொழிலாளர்களுக்கான அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் உதவித் தொகை நிறுவனங்களால் வழங்கப்படுகிறது.

பயிற்சி முடித்த ஒவ்வொரு தொழிற்பழகுநரும் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் ஆண்டிற்கு இருமுறை ஏப்ரல் / மே மற்றும் அக்டோபர் / நவம்பர் ஆகிய மாதங்களில் நடத்தப்படும் அகில இந்திய தொழிற்பழகுநர் தொழிற்தேர்வை எதிர்கொள்கிறார். தேர்ச்சி பெறும் தொழிற்பழகுநர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 3.31. தேசிய தொழிற் பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS)

இத்திட்டம் தொழிற்பழகுநர் பயிற்சியினை ஊக்குவிப்பது, தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை அதிகரிப்பது ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொழிற்பழகுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பின்வருமாறு ஊக்கத் தொகை மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

(i) ஒவ்வொரு மாதமும் ரூ.1,500/–க்கு மிகாத வகையில் தொழிற்பழகுநர் பயிற்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையில் 25 சதவீதம் பங்கீட்டுத் தொகையாக வேலையளிப்போருக்கு வழங்கப்படுகிறது.

(ii) அடிப்படைப் பயிற்சிக்கான கட்டணம் ரூ.7,500/–க்கு மிகாமல் அதிகபட்சமாக 500 மணி நேரம் / 3 மாத பயிற்சிக்காக அடிப்படை பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு பங்கீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்தவர்கள் தவிர, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் / பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா ஆகியவற்றின் மூலம் குறுகிய கால பயிற்சி முடித்தவர்கள் மற்றும் தொழிற்பிரிவிற்கேற்றவாறு குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றவர்கள் தொழிற்பழகுநர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

## 3.32. பயிற்சியற்ற இளைஞர்கள் (Freshers) தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாகுதல்

இத்திட்டத்தில் 2020–க்குள் எட்டப்படவேண்டிய ஒட்டுமொத்த தேசிய இலக்கான 50 இலட்சம் தொழிற்பழகுநர்களை அடைய பல திருத்தங்கள் மற்றும் புதிய

மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு முக்கிய மாற்றமாக 8–ஆம் வகுப்பு, 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் வரையறுக்கப்பட்ட மற்றும் விருப்ப தொழிற்பிரிவுகளில் பயிற்சியற்ற தொழிற்பழகுநர்களாக ஈடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்பழகுநர்களாக பயிற்சி பெறுவதற்கான ஒரே நிபந்தனை பயிற்சியாளர்கள் குறைந்தபட்சம் 14 வயதை முடித்திருக்க வேண்டும் என்பதேயாகும்.

## 3.33. தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன் வலுப்படுத்துதல் (STRIVE)

இத்திட்டமானது பயிற்சி வழங்கும் அமைப்புகள் குறிப்பாக தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சி வழங்கும் அமைப்புகள் ஆகியவற்றில் நிறுவனம் சார்ந்த பயிற்சி முறைகளில் அவசியமாக தேவைப்படும் சீர்திருத்தங்களை ஊக்கப்படுத்திடும் நோக்கில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.26.00 கோடி இந்திய அரசால் நிதி ஒப்பளிப்பு

செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில், புதிய தலைமுறை தொழிற்பிரிவுகள், மகளிர் பங்களிப்பினை ஊக்குவிக்கும் வகையிலான குறுகிய கால தொழிற்பிரிவுகள் மற்றும் நேரடி பயிற்சி வழங்கும் விதத்தில் இரட்டைப் பயிற்சி ஆகியவை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது மாநிலத்தின் நீடிக்கும் வளர்ச்சிக்கான இலக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சியாளர்களின் எண்ணிக்கையையும், மகளிர் சேர்க்கை விகிதத்தினையும் அதிகரிப்பதை உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கும் பயிற்சியின் தரத்தினை மேம்படுத்துதல்
- மாநில அளவில் தொழிற்பழகுநர் பயிற்சியினை ஊக்குவித்தல் மற்றும் கண்காணித்தல்
- தொழில் நிறுவனங்களில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்கள் பயிற்சி பெற வழிவகை செய்தல்
- மாநில அளவில் இதற்கென தொழிற்பழகுநர் பயிற்சிக்கான குழுமத்தை உருவாக்குதல்

## 3.34. மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம்

மாநில அரசிற்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே தொழிற்பழகுநர் பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க மாநில அளவில் தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம் என்ற பெயரில் ஒரு பிரத்தியேக குழு உருவாக்கப்பட்டுள்ளது. மாநில திட்ட இயக்குநர் / மாநில தொழிற்பழகுநர் ஆலோசகர் தலைமையிலான இந்த குழுமம் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளின் கூட்டமைப்புகளில் தொழிற்பயிற்சித் திட்டத்தினை ஊக்குவித்திடும் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது. இக்குழுமம் இந்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் 100 சதவிகித நிதி உதவியுடன் செயல்படும்.

## 3.35. திறன் தேடல் போட்டிகள்

தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர கீழ்கண்ட போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

| வ. எண் | போட்டிகள் | போட்டிகளை நடத்துபவர் | விருதுகள் | 2011–19 வரை வெற்றி பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அகில இந்திய திறனாய்வு போட்டி (All India Skill Competition) | மத்திய அரசு | ரூ.50,000/– மற்றும் நற்சான்று | 11 |
| 2 | 18 தொழிற்பிரிவு களில் மாநில திறனாய்வு போட்டி (State Level Skill Competition) | மாநில அரசு | ரூ.25,000/– மற்றும் நற்சான்று | 81 |
| 3. | ஐந்து தொழிற்பிரிவு களில் படைப்பாற்றல் போட்டி (Project Work Competition) | மாநில அரசு | ரூ.50,000/– மற்றும் நற்சான்று | 20 |

## 3.36. புதிய முனைப்புகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **3.7.2018** அன்று தமிழக சட்டப்பேரவையில் விதி எண் **110–**ன் கீழ் திறன் பயிற்சி திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்திடவும் கண்காணிக்கவும் சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் இரு மண்டல இணை இயக்குநர் **(**பயிற்சி**)** அலுவலகங்கள் ரூ**.2.85** கோடி செலவில் உருவாக்கப்படும் என அறிவித்தார்கள்**.** இந்த அலுவலகங்கள் **22.2.2019** அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன**.**

**2018–19–**ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத்தொடரின் போது கீழ்கண்ட புதிய முனைப்புகள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன**.**

- ❖ தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை அதிகரிக்கும் வகையில் தொழிற்சாலைகளுக்கு தொடர்புடைய நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ**.30.00** கோடி செலவில் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகின்றன**.**

❖ தொழிற்சாலைகளின் சூழலை பயிற்சியாளர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் பயிற்சி முடித்தவுடனேயே வேலைவாய்ப்பினைப் பெறும் வகையிலும் பயிற்சியாளர்களை தயார் செய்திட தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடம் மாநிலம் முழுவதும் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைச் சார்ந்த **10,000** பயிற்சியாளர்களுக்கு நேரடி பயிற்சி அளிப்பதற்காக **397** தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

❖ மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ஆர்க்கிடெக்சரல் அசிஸ்டென்ட், ஆட்டோபாடி ரிப்பேரிங் மற்றும் பெயிண்ட்டிங், ஆப்பரேட்டர் அட்வான்ஸ்டு மெசின் டூல்ஸ், டூல் அண்ட் டை மேக்கிங், டெக்னிஷியன் பவர் எலக்ட்ரானிக்ஸ், மெஷினிஸ்ட், மெக்கானிக் ரெப்ரிஜெரேஷன் மற்றும் ஏர்–கண்டிஷனிங், ஃபயர் டெக்னாலஜி மற்றும் இன்டஸ்டிரியல் சேஃப்டி மேனேஜ்மெண்ட் போன்ற புதிய மேம்படுத்தப்பட்ட தொழிற்பிரிவுகள் **20** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.**38.00** கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**2018–19**–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற கூட்டத்தொடரின் போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட புதிய திட்டங்களை அறிவித்தார்கள்.

- பயிற்சியாளர்கள் மெய்நிகர் வழியில் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் 14 தொழிற்பிரிவுகளில் பயிற்றுவிக்க கணினி வழியிலான (e-content) பாடத்திட்டங்கள் ரூ.1.27 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.
- பயிற்சியாளர்கள் தகுதியான வேலைவாய்ப்பை தொழிற்சாலைகளில் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கென ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் பயிற்சி அலுவலர் நிலையில் ஒரு பணியமர்த்தும் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி தடையின்றி தொடர ஏதுவாக இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர் மற்றும் பயிற்சி அலுவலர் போன்ற நிலைகளில் உள்ள பயிற்றுநர்களின் பணிக்காலம் கல்வியாண்டு முடியும் வரை அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ❖ இத்துறையால் செயல்படுத்தப்படும் கைவினைஞர் பயிற்சித்திட்டம், தொழில்பழகுநர் பயிற்சித்திட்டம், தொழிற்பள்ளிகள் போன்ற திட்டங்களின் கீழான தேர்வுகளை நடத்திடும் பொருட்டு மாநில தலைமையகத்தில் அமைந்துள்ள தேர்வு குழுமம் மாநில தொழிற்பயிற்சி தேர்வு வாரியமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களிடையே விளையாட்டு செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விதமாக ஆண்டுதோறும் மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முந்தைய ஆண்டுகளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்ற பயிற்சியாளர்களிடமிருந்து மண்டல மற்றும் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்காக ரூ.10/– வசூலிக்கப்பட்டு வந்தது. தற்போது இந்த செலவினம் மாநில அரசால் முழுமையாக

ஏற்றுக்கொள்ளப்பட்டு **2018–19**–ஆம் ஆண்டிற்கு ரூ.**17.00** இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் **7.3.2019** அன்று வேலூரில் பிரம்மாண்டமாக நடைபெற்ற மாநில விளையாட்டு போட்டிகளுக்கான வெற்றிவிழாவில் பரிசுகளை வழங்கினார்கள்.

❖ இத்துறையில் நடத்தப்படும் அனைத்து திறன் பயிற்சி திட்டங்களை திறம்பட செயல்படுத்தவும் கண்காணிக்கவும் அனைத்து மாவட்டங்களிலும் உதவி இயக்குநர்களின் தலைமையில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வுதவி இயக்குநர்கள், மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்களை மாவட்ட ஆட்சியர்கள், இத்துறையின் மண்டல இணை இயக்குநர்கள் (பயிற்சி) மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

## 3.37. புதுமையான திட்டங்கள்

### மெய்நிகர் வழியில் கற்பித்தல்

மெய்நிகர் வகுப்பறைகள் ‘மையம் மற்றும் ஆரங்கள்’ முறையில் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மைய பயிற்சி நிலையங்களாக உள்ளன. ஆர பயிற்சி நிலையங்கள் ஆனைக்கட்டி, கருமந்துறை, கொல்லிமலை, கூடலூர், ஜமுனாமரத்தூர் மற்றும் சங்கராபுரம் ஆகிய தொலைதூர மலைப்பகுதிகளில் அமைந்துள்ளன. மைய பயிற்சி நிலையத்தின் பயிற்றுநர்களின் நிபுணத்துவத்தை ஆர பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பழங்குடியின பயிற்சியாளர்களும் பெற முடியும் என்பதே இத்திட்டத்தின் சிறப்பாகும்.

### சிமுலேட்டர்கள் மூலம் பயிற்சி வழங்குதல்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பற்றவைப்பு (Welding) திறனை கற்றுக்கொள்வதற்கு சிமுலேட்டர்கள் (Simulators) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சிமுலேட்டர்கள் பற்றவைப்பு செய்முறைப் பயிற்சியினை எளிதாகவும் மெய்நிகர் வழியாகவும் பயிற்றுவிப்பதற்கு

உதவுவதோடு புகை, தீப்பொறி மற்றும் அதிகபட்ச ஒளி ஆகிய இடர்பாடுகளை தவிர்த்து பயிற்சியாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. இதனால் அதிகமான பெண் பயிற்சியாளர்கள் இத்திறனைக் கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### 3.38. சிறந்த பயிற்றுநர் விருது

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறப்பாக பணியாற்றும் முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு ‘Dr.ராதாகிருஷ்ணன் – சிறந்த பயிற்றுநர் விருது’ ரூ.10,000/–க்கான தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் நற்சான்றிதழுடன் வழங்கப்படுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில், 60 அலுவலர்கள் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

### 3.39. கைவினைஞர் பயிற்சித் திட்ட பயிற்றுநர்களின் முன் கற்றலை அங்கீகரித்து இணைய வழியில் CITS சான்றிதழ் வழங்குதல்

தலைமை பயிற்சி இயக்குநரகத்தின் கைவினைஞர் பயிற்றுநர் பயிற்சித் திட்டமானது தொழிற்பயிற்சி நிலையங்களில் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் பணி செய்து

அனுபவம் பெற்ற பயிற்றுநர்களின் முன் கற்றலை அங்கீகரித்து சான்றளிக்கிறது. இத்தேர்வினை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்றுநர்கள் தேசிய கைவினைஞர் பயிற்றுநர் சான்றிதழைப் பெறுவார்கள். இத்திட்டத்தின் மூலம் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிபுரிந்து வரும் பயிற்றுநர்கள் சி.எஃப்.ஐ. இணையதளம் வாயிலாக ஏதேனும் ஒரு தேசிய திறன்பயிற்சி நிலையத்தில் தனித்தேர்வர்களாக தங்களைப் பதிவு செய்து, தேர்வெழுதி தகுதி பெற வேண்டும். 2018–19–ஆம் ஆண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து 185 பயிற்றுநர்களும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து 129 பயிற்றுநர்களும் இச்சான்றிதழைப் பெறுவதற்காக பதிவு செய்துள்ளனர்.

**3.40. அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சி**

அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையமும் மாருதி சுசூகி நிறுவனமும் இணைந்து கம்மியர் மோட்டார் வண்டி (MMV) தொழிற்பிரிவில் உள்ள பயிற்சியாளர்களுக்கு நான்கு சக்கர வாகனத்தை பராமரிக்கத் தேவையான மேம்பட்ட பயிற்சிகளை வழங்குவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்,

மாருதி சுசூகி நிறுவனத்தினர் 'ரூப்பந்திரான்' பயிற்சி, 'உலக தரம் வாய்ந்த சிறந்த உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான பயிற்சி' ஆகியவற்றை அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தைச் சார்ந்த **26** பயிற்சியாளர்களுக்கு **25.2.2019** முதல் **2.3.2019** வரை அரியானாவில் உள்ள குர்கான் ஆலையில் வழங்கினார்கள்.

## 3.41. பெரு நிறுவனங்களின் சமுதாய பொறுப்பு திட்டத்தின் (CSR) கீழ் தொழிற்சாலைகளின் பங்களிப்பு

பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்காக இத்துறையானது அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சமுதாய பொறுப்பு திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்சாலைகள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ளன.

இந்த ஆண்டில், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஹூண்டாய் மோட்டார்ஸ் நிறுவனம் கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கம்மியர் மோட்டார் வண்டி (MMV)

தொழிற்பிரிவின் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் ரூ.55.00 இலட்சம் செலவில் பணிமனை கட்டிடத்தோடு ரூ.11.00 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்களையும் வழங்கியுள்ளது. மாருதி சுசூகி நிறுவனம் அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள மெக்கானிக் ஆட்டோபாடி பெயிண்டிங் தொழிற்பிரிவிற்கு ரூ.48.00 இலட்சம் செலவில் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளது. ஹோண்டா மோட்டார்ஸ் & ஸ்கூட்டர்ஸ் இந்தியா நிறுவனம் செங்கல்பட்டு, மதுரை, சிவகங்கை மற்றும் தர்மபுரி ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இரு சக்கர வாகனங்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் தொடர்பான மாதிரி இன்ஜின்களை வழங்கியுள்ளது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOCL) நிறுவனம் தனது பங்களிப்பாக இராமநாதபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பாதுகாப்பு சுவர் கட்டவும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் ரூ.80.00 இலட்சம் வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளின் தொழிலாளர் தேவை மற்றும் வழங்கலுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதில் நமது தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இவ்வளர்ச்சித்

திட்டங்கள் உதவுகின்றன. தமிழகத்தை இந்தியாவின் திறன்கேந்திரமாக உருவாக்கும் பாதையில் முன்னேற இம்முயற்சிகள் உறுதுணையாகின்றன.

## 4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

இளைஞர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை மேம்படுத்தும் வகையில் தேவைக்கேற்ற மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு பொருத்தமான திறன் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கி நாட்டின் திறன்மிகு மையமாக தமிழகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதே தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமாகும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாநிலத்தின் திறன் பயிற்சிகளுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்படுவதுடன் தொழில் நிறுவனங்கள், தொழில் நிறுவன கூட்டமைப்புகள், பயிற்சி நிறுவனங்கள், துறை திறன் குழுமங்கள், மதிப்பீடு செய்யும் நிறுவனங்கள் மற்றும் மத்திய மாநில அரசு அமைப்புகள் ஆகிய திறன் தொடர்புடைய அனைவரையும் ஒருங்கிணைக்கிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது மத்திய மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களை அங்கீகரித்து வேலைவாய்ப்புடன் கூடிய தரமான திறன் பயிற்சி வழங்கப்படுவதை உறுதிசெய்கிறது.

## 4.1. தேசிய திறன் கட்டமைப்பை (NSQF) நடைமுறைப்படுத்துதல்

மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான தேசிய தரத்திலான திறன் பயிற்சி வழங்கும் பொருட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது தேசிய திறன் கட்டமைப்பால் (NSQF) அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சிகளை வழங்குவதுடன் பிற தர நிர்ணயங்களான பயிற்சியின் கால அளவு, பயிற்சியின் தரம், மதிப்பீடு செய்யும் முறை மற்றும் பயிற்சி கட்டண முறை ஆகியவற்றில் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் (MSDE) அங்கீகரிக்கப்பட்ட பொதுவான நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்து சான்று பெறும் பயிற்சியாளர்களில் குறைந்தபட்சம் 70% பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத் தரும் நோக்கில் வழங்கப்படும் திறன் பயிற்சிகளில் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி தொகுப்புகள் (Qualification Pack) பின்பற்றப்படுகின்றன.

## 4.2. பயிற்சிகளுக்கான சுதந்திரமான மதிப்பீடு மற்றும் சான்றளித்தல்

பயிற்சியின் தரத்தை உறுதி செய்யும் வண்ணம், மாநில தொழிற்பயிற்சி குழுமம் (State Council for Vocational Training) மற்றும் துறை திறன் குழுமம் (Sector Skill Council) வாயிலாக மூன்றாம் நபர் (Third Party) மதிப்பீடு மற்றும் சான்றளித்தலின் மூலம் சுதந்திரமான மற்றும் நடுநிலையான மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு உறுதி செய்யப்படுகிறது.

## 4.3. பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்

ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட பயிற்சி வழங்கப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை மற்றும் தொழிற்பிரிவுகளுக்கேற்ப, திறன் பயிற்சி வழங்க முன்வரும் நிறுவனங்களிடமிருந்து விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் (Expression of Interest) பெறப்பட்டு, அந்நிறுவனங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இணை இயக்குநர்களால் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சி நிறுவனங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இவ்வாறு

அந்நிறுவனங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகள் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. தேசிய திறன் கட்டமைப்பின் அளவீடுகளின்படி குறுகிய கால திறன் பயிற்சிகளை வழங்க ஏதுவாக மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட 741 பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 4.4. 2018–19–இல் நடத்தப்பட்ட மாவட்ட மற்றும் துறை வாரியான திறன் பயிற்சி விவரங்கள்

இந்திய அளவில், தமிழ்நாடு பொருளாதாரத்தில் இரண்டாம் இடம் வகிப்பதோடு பல்வேறு உற்பத்தி சேவைத்துறை நிறுவனங்களின் மையமாகவும் இருப்பதினால் கீழ்காணும் துறைகளில் பெருமளவு வேலைவாய்ப்புகள் உருவாகி வருகின்றன.

1. தானியங்கி
2. இலகு பொறியியல்
3. சரக்கு நகர்வு மேலாண்மை
4. கட்டுமானம்
5. சிறுவணிகம்
6. தகவல் தொழில் நுட்பம்
7. தொலைத் தொடர்பு
8. உணவு பதனிடுதல்

9. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
10. ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு
11. அழகு கலை
12. சுகாதாரம்
13. ஜவுளி மற்றும் ஆடை வடிவமைத்தல்
14. வங்கி, நிதி மற்றும் காப்பீடு சேவைகள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது மேற்காணும் முக்கிய துறைகளில் காணப்படும் வேலைவாய்ப்புக்களைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் உரிய பயிற்சி நிறுவனங்களுக்கு நிதி அளித்து தரமான சந்தை சார்ந்த திறன் பயிற்சிகளை வழங்க இலக்குகளை பகிர்ந்தளிக்கிறது. மேலும் **2018–19**–ஆம் நிதியாண்டில் இதுவரை இல்லாத மிக அதிக அளவில் **1,40,124** நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்ட காலத்திலிருந்து வழங்கப்பட்ட பயிற்சிகளில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சியாகும்.

**2018–19**–ல் மாவட்ட வாரியாக திறன் பயிற்சியளிக்கப்பட்டோர் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | மாவட்டம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 4,883 |
| 2 | சென்னை | 14,724 |
| 3 | கோயம்புத்தூர் | 6,117 |
| 4 | கடலூர் | 3,530 |
| 5 | தர்மபுரி | 7,088 |
| 6 | திண்டுக்கல் | 5,595 |
| 7 | ஈரோடு | 6,719 |
| 8 | காஞ்சிபுரம் | 6,837 |
| 9 | கன்னியாகுமரி | 1,024 |
| 10 | கரூர் | 2,441 |
| 11 | கிருஷ்ணகிரி | 6,805 |
| 12 | மதுரை | 5,657 |
| 13 | நாகப்பட்டினம் | 2,727 |
| 14 | நாமக்கல் | 4,028 |
| 15 | பெரம்பலூர் | 840 |
| 16 | புதுக்கோட்டை | 911 |
| 17 | இராமநாதபுரம் | 2,509 |
| 18 | சேலம் | 4,041 |
| 19 | சிவகங்கை | 2,158 |
| 20 | தஞ்சாவூர் | 3,692 |
| 21 | நீலகிரி | 1,736 |
| 22 | தேனி | 965 |
| 23 | திருவள்ளூர் | 6,292 |
| 24 | திருவண்ணாமலை | 5,117 |
| 25 | திருவாரூர் | 1,698 |
| 26 | தூத்துக்குடி | 1,534 |
| 27 | திருநெல்வேலி | 2,829 |
| 28 | திருப்பூர் | 8,005 |
| 29 | திருச்சிராப்பள்ளி | 4,853 |
| 30 | வேலூர் | 9,320 |
| 31 | விழுப்புரம் | 2,703 |
| 32 | விருதுநகர் | 2,746 |
| மொத்தம் | | 1,40,124 |

**2018–19**–ஆம் ஆண்டில் துறைவாரியாக திறன் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரமானது ஒவ்வொரு துறையிலும் அளிக்கப்பட்ட பயிற்சியின் முக்கியத்துவத்தை பிரதிபலிப்பதாக உள்ளது:

| வ. எண் | துறையின் பெயர் | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|
| 1. | தகவல் தொழில் நுட்பம் | 8,445 |
| 2. | தொலைத் தொடர்பு | 2,289 |
| 3. | ஆயத்த ஆடை | 38,586 |
| 4. | கட்டுமானம் | 8,356 |
| 5. | சரக்கு நகர்வு மேலாண்மை | 2,447 |
| 6. | ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு | 2,898 |
| 7. | நெகிழி பொறியியல் | 1,447 |
| 8. | சில்லரை வர்த்தகம் | 1,991 |
| 9. | தோல் மற்றும் தோல் பொருட்கள் | 12,056 |
| 10. | விருந்தோம்பல் | 3,679 |
| 11. | பசுமை பணிகள் | 105 |
| 12. | ஜவுளித் துறை | 1,356 |
| 13. | அழகு கலை | 4,383 |
| 14. | சுகாதாரம் | 3,710 |
| 15. | இலகு பொறியியல் | 24,291 |
| 16. | வங்கி, நிதி மற்றும் காப்பீடு சேவைகள் | 2,442 |
| 17. | தானியங்கி | 5,802 |
| 18. | விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் | 2,305 |
| 19. | கைவினைத் தொழில்கள் | 429 |
| 20. | பாதுகாப்பு | 80 |
| 21. | குளிர்பதனம் (ம) குளிர்சாதன பராமரிப்பு | 699 |
| 22. | உணவு பதனிடுதல் | 449 |
| 23. | நகை வடிவமைத்தல் | 656 |
| 24. | மற்றவை | 11,223 |
| | **மொத்தம்** | **1,40,124** |

## 4.5. மாவட்டந்தோறும் திறன் முகாம் மற்றும் விழிப்புணர்வு

திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவது மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி பெற வாய்ப்பினை வழங்குவது ஆகிய இரட்டை நோக்கத்துடன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையரகத்தின் வேலைவாய்ப்பு பிரிவு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிறுவனங்களின் அரங்குகள் அமைக்கப்பட்டு தொழில்நெறி வழிகாட்டுதலைத் தொடர்ந்து திறன் பயிற்சிகளுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் திறன் பயிற்சி குறித்த சிறப்பு செயல்பாடுகள் ஒவ்வொரு திங்கள் கிழமையும் மேற்கொள்ளப்படுகின்றன.

இலவசமாக வழங்கப்படும் திறன் பயிற்சி திட்டங்களின் முக்கியத்துவம் மற்றும் தேவை குறித்து இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில் நடமாடும் திறன் ஊர்திகள் (Mobile Skill Vans) மூலமாக இளைஞர்களிடையே

விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு புதிய அணுகுமுறையை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

### 4.6. மாநில திறன் மாநாடு மற்றும் மாவட்ட திறன் போட்டிகள்

தொழில் திறன் புதுமைகளை உருவாக்க ஊக்கப்படுத்தவும் இளைஞர்களின் திறனை காட்சிபடுத்தி அங்கீகரிக்கவும் மாவட்ட அளவில் திறன் போட்டிகள் நடத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து மாவட்ட அளவில் முதன்மை பெறும் நபர்களுக்கு மாநில அளவிலான திறன் மாநாடு நடத்தப்பட்டு வருகிறது. மண்டலம் மற்றும் தேசிய அளவில் திறன் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநில திறன் போட்டியில் வெற்றி பெறும் நபர்கள் உலக அளவில் நடைபெறும் திறன் போட்டிகளில் தமிழ்நாடு சார்பாக கலந்து கொள்வார்கள்.

**2018–19–**ல் மாவட்ட மற்றும் மாநில அளவிலான திறன் போட்டிகள் நடத்தப்பட்டு மாநில அளவில் வெற்றி பெற்றவர்கள் பெங்களூரில் நடைபெற்ற மண்டல அளவிலான திறன் போட்டியில் கலந்து கொண்டதைத் தொடந்து புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்றனர்.

இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெண்கல பதக்கங்களை வென்றதன் மூலம் நமது மாநிலத்தைச் சார்ந்த நான்கு நபர்கள் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்தனர். தங்கப்பதக்கம் வென்ற இருவர், ஆகஸ்டு 2019–ல் ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலக திறன் போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்ள உள்ளார்கள்.

## 4.7. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வலைதளம் மற்றும் அலைபேசி செயலி

திறன் பயிற்சி தொடர்புடைய அனைவரும் செயலாற்ற ஒரு பொதுவான பயன்பாட்டுத் தளமாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளமான www.tnskill.tn.gov.in அமைந்துள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இணையதளம் வாயிலாக திறன் பயிற்சிக்காக பதிவு செய்யவும் தேசிய திறன் கட்டமைப்பில் உள்ள பொருத்தமான திறன் பயிற்சியினைத் தேர்வு செய்யவும் இவ்விணையதளத்தில் வசதிகள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் திறன் பயிற்சிக்காக இவ்விணையதளத்தில் பதிவு செய்துள்ள விருப்பமுள்ள பதிவுதாரர்களைத் தொடர்பு கொண்டு பயிற்சியில் சேர்த்துக் கொள்ள முடியும்.

பல்வேறு தொழில் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்து சான்றிதழ் பெற்றுள்ளவர்களின் சுய விவரங்கள் அடங்கிய திறன் பதிவு தொகுதியாக (Skill Registry) இத்தளம் செயல்படுகிறது.

ஒருங்கிணைந்த ஒற்றைத் திறன் பதிவு தொகுதியை (Unified Single Skill Registry) உருவாக்கும் நோக்கில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் பிற துறைகளின் விவரங்களை உள்ளடக்கியதாக இவ்விணையதளத்தை மேம்படுத்தி ஒருங்கிணைக்கும் பணியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் ஈடுபட்டுள்ளது.

### 4.8. பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கான உயர் தொழில்நுட்ப திறன் பயிற்சி

பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பட்டதாரிகளை தொழில்துறைக்கு ஏற்றவாறு தயார்படுத்தும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தானியங்கி மற்றும் ரோபோடிக்ஸ் துறையில் உலக அளவில் முன்னணி நிறுவனமான சீமென்ஸ் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக (PPP) ஒரு திறன்மிகு மையம் (Centre of

Excellence) மற்றும் ஐந்து இணைப்பு தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்களை (t-SDIs) ரூ.546.84 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைத்துள்ளது.

சென்னை குரோம்பேட்டை, எம்.ஐ.டி. வளாகத்தில் அமைந்துள்ள திறன்மிகு மையம் மற்றும் பின்வரும் ஐந்து இணைப்பு தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.10.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

1) அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, காஞ்சிபுரம்
2) அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, விழுப்புரம்
3) தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப கல்லூரி, வேலூர்
4) மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி
5) முருகப்பா பாலிடெக்னிக் (அரசு உதவி பெறும்) கல்லூரி, ஆவடி

பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பட்டதாரி மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை அதிகரிப்பதற்காக உயர் தொழில்நுட்ப திறன் பயிற்சிகளை வழங்க எம்.ஐ.டி. முக்கிய மையமாகவும் மேற்காணும்

5 மையங்கள் கிளைகளாகவும் செயல்படுகின்றன. இம்மையங்களின் மூலம் 2018–19–ஆம் ஆண்டில் 2,887 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**4.9. சிறப்பு திட்டங்கள்**

இந்திய தானியங்கி துறையின் மையமாக விளங்கும் தமிழ்நாட்டில் வாகனம் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் 'அம்மா இரு சக்கர வாகன பழுது பார்த்தல் பயிற்சி' தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

இதைப் போல, இளைஞர்களின் விரும்பத்தக்க தொழில் வாய்ப்பாக சேவைத்துறை உருவாகி வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக ரூ.23.01 கோடி செலவில் 20,000 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சேவைத்துறையில் தொடர்புடைய தொழில்

பிரிவுகளில் குறுகிய கால திறன் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் திறன் பெற்ற பணியாளர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பதை உறுதி செய்ய 'அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்தின்' கீழ் திறன் பயிற்சி வழங்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ.2,000/– வீதம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2018–19–ஆம் ஆண்டில் 25,246 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 4.10. அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல் – திறன் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் (Recognition of Prior Learning-RPL)

அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் என்பது ஒரு நபரிடம் காணப்படும் திறன்கள், அறிவு மற்றும் முறையான / முறைசாரா கற்றலின் வழி அவர் பெற்ற அனுபவம் ஆகியவற்றை சோதித்து சான்றளிப்பதாகும். இத்திட்டத்தின்

மூலம் மார்ச் **2019** வரையில் பின்வரும் துறைகளில் **33,312** தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

1) கட்டுமானம்
2) ஆடை வடிவமைத்தல்
3) வண்ணம் மற்றும் வண்ணப்பூச்சு
4) தோல் மற்றும் தோல்பொருட்கள்
5) சரக்கு நகர்வு மேலாண்மை
6) தானியங்கி
7) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
8) வீடு சார்ந்த பணிகள்

மேலும் பொதுப் பணித்துறை, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் கட்டுமான ஒப்பந்த பணிகளில் பணியின் தரம் மற்றும் பணியிடங்களில் விபத்துகளைக் குறைக்கும் பொருட்டு, அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை பணி அமர்த்திட வேண்டுமென மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

**4.11. பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 2.0**

தேசிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான கொள்கை, **2015** அதிக அளவிலும் வேகமாகவும் தரமானதாகவும் திறன் பயிற்சி வழங்குவதில் உள்ள சவாலை எதிர்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. இக்கொள்கையானது, நாட்டில் வழங்கப்படும் அனைத்து திறன் மேம்பாட்டு பயிற்சிகளையும் ஒரே தர அளவீடுகளில் தேவைக்கேற்ற வகையில் ஒரே அமைப்பின் கீழ் வழங்க முனைகிறது.

பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா **2.0** **(2016–2020)** திட்டமானது, பாரத பிரதமரின் கௌசல் விகாஸ் யோஜனா **2015–2016** திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட மாற்றங்களுடன் கூடிய வடிவமாகும். இந்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான அமைச்சகம் (MSDE) மேற்கண்ட இலக்குகளை அடையும் வகையில் பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா **2.0** திட்டத்தினை செயல்படுத்துகிறது. மேலும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC), துறை திறன் குழுமங்கள் (SSCs), மதிப்பீடு செய்யும் நிறுவனங்கள் (AAs), மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (TPs)

ஆகியவை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 2.0 திட்டத்தின் ஒரு பிரிவான 'மத்திய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் திட்டம்' (Centrally Sponsored State Managed) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகமானது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்பு மற்றும் பொறுப்புகள் குறித்து விரிவான வழிகாட்டல் விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. இதற்காக ரூ.34.43 கோடி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது மார்ச் 2018 முதல் 160 அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 385 பயிற்சி மையங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மார்ச் 2019 வரை 31,964 நபர்கள் பயிற்சிக்காக சேர்க்கை செய்யப்பட்டு அவர்களில் 24,278 நபர்கள் பயிற்சியை முடித்துள்ளனர்.

## 4.12. சங்கல்ப் (SANKALP) – உலக வங்கி நிதி உதவி திட்டம்

வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவுக்கான விழிப்புணர்வு திட்டமானது (Skills Acquisition and Knowledge Awareness for Livelihood Promotion) தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பின் மைய நோக்கத்தை செயல்படுத்துகிறது. மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் முக்கிய துணை அமைப்புகளின் வழி இத்திட்டம் துவக்கப்பட்டது. உலக வங்கி உதவியுடன் தேசிய திறன் மேம்பாட்டு திட்டத்தின் அனைத்து நோக்கங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டம் விரைவு திட்டமாக நிறைவேற்றப்பட உள்ளது. தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள பயிற்சி நிறுவனங்களின் அமைப்பு முறைகளை வலுப்படுத்துவது, தரமான பயிற்றுநர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை உருவாக்குவது, மாநில அளவில் செயல்படுத்தப்படும் அனைத்து திறன் பயிற்சி திட்டங்களையும் ஒருங்கிணைப்பது, பயிற்சி திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைகளை வலுப்படுத்துவது மற்றும் சமூகத்தில் பின் தங்கியவர்களுக்கு சிறப்பான பயிற்சி

கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

உலக வங்கியின் நிதி உதவியோடு மத்திய மாநில அரசுகளின் **60:40** என்ற விகித நிதி பங்கீட்டின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கான நிதி, அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம் மற்றும் சேர்க்கை மானியம் என இரு கூறுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம் (System Strengthening Grant) | மாநில திறன் மேம்பாட்டு அமைப்பை வலுப்படுத்தவும் மற்றும் அனைத்து திறன் பயிற்சி செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக வலுவான முறையை உருவாக்கவும் இம்மானியம் பயன்படுத்தப்படும். |
| 2. | சேர்க்கை மானியம் (Inclusive Grant) | விளிம்பு நிலையில் உள்ள பெண்கள், பட்டியல் இனத்தார், பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளி ஆகியோர் இடையே திறன் பயிற்சி பெற்ற மனித வளத்தை அதிகரிக்கச் செய்ய பயன்படுத்தப்படும். |

இத்திட்டத்தினை செயல்படுத்த விருப்பம் தெரிவித்தும், மாநிலத்தின் **40%** பங்கினை உறுதி செய்தும் தமிழ்நாடு

அரசால் ஒப்புதல் கடிதம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. முதல் ஆண்டிற்கான அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம் மற்றும் சேர்க்கை மானிய திட்ட தொகையாக ரூ.21.41 கோடி ஒதுக்கீடு செய்யக்கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 4.13. திறன் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான விருதுகள்

திறன் வழங்குதலில் முக்கிய தொடர்புடைய பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பணி வழங்கும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு தொழில் பிரிவிலும் சிறந்து விளங்கும் திறன் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பணி வழங்குபவர் / தொழில் நிறுவனங்களுக்கான விருதுகள் 07.03.2019 அன்று முதன் முறையாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

2018–19–ஆம் ஆண்டில், மொத்தம் 22 திறன் பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் முதல் பரிசாக ரூ.20,000/– மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.10,000/– வழங்கப்பட்டது.

அதிக அளவில் பணி நியமனம் வழங்கிய தொழில் நிறுவனங்களுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000/– மற்றும் இரண்டாம் பரிசாக ரூ.75,000/– வழங்கப்பட்டது.

### 4.14. திறன் இடைவெளி குறித்த ஆய்வு மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு திட்டங்கள்

மாறி வரும் சந்தை தேவைகள் மற்றும் தனிநபர்களின் தொழில் தேர்வுகளின் காரணமாக தொழில் நிறுவனங்களுக்கான திறன் தேவை மற்றும் தொழிலாளர்கள் கொண்டுள்ள திறன் ஆகியவற்றுக்கிடையே தொடர்ச்சியான ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தபோதிலும் இளைஞர்கள் வேலைபெறும் திறனைப் பெறுவது ஒரு சவாலாகவே இருந்து வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் ‘திறன் இடைவெளி குறித்த ஆய்வு’ தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.1.42 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் குறிப்பிட்ட தொழிற்பிரிவுகள் மற்றும் துறைகளில் உள்ள திறன் வேறுபாட்டைக் கவனத்தில் கொண்டு ‘மாவட்ட திறன் மேம்பாட்டு திட்டம்’ உருவாக்கப்படும். தொழில் நிறுவன

கூட்டமைப்புகளுடனான குழு விவாதங்கள் மற்றும் இளைஞர்களின் ஆர்வத்தைக் கண்டறியும் கணக்கெடுப்பு ஆகியவை நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையிலும் திறன் தேவை மற்றும் திறன் வழங்கல் ஆகியவற்றிற்கிடையே உள்ள பொருத்தமின்மையை மக்கள் தொகை சார்ந்த தரவுகளுடன் இணைத்து ஆராய்வது இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள், உத்தேச முதலீடுகள், இளைஞர்களின் ஆர்வம், திறன் பயிற்சிக்கான கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரம் தொடர்புடைய வேலைவாய்ப்புகள் ஆகியவை குறித்தும் இந்த ஆய்வு ஆராயும். ஒவ்வொரு மாவட்டத்திற்குமான திறன் தேவைகள் மிகப் பெரிய அளவில் மாறுபட்டு இருப்பதால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாவட்டம் சார்ந்த திறன் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு திறன் இடைவெளி குறித்த ஆய்வும் மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டமும் உதவும்.

**4.15. உயர் திறன் பயிற்சி மையங்கள்**

பொருளாதார முக்கியத்துவம் பெற்ற துறைகளில் உயர்நிலை திறன் பயிற்சி மையங்களை ஏற்படுத்துவதன் தேவையை உணர்ந்த தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம், பகுதி–2–ன் ( TNIPP -Phase II ) ஒரு பகுதியாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் உதவியுடன் பின்வரும் 5 துறைகளில் ரூ.100 கோடி செலவில் உயர்திறன் பயிற்சி மையங்களை அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. தானியங்கி, தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திர கருவிகள்
2. மருத்துவம் மற்றும் சுகாதார நலன்
3. கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு
4. சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து
5. உற்பத்தி மற்றும் இயந்திரக் கருவிகள்

இத்திட்டத்திற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ரூ.50.00 கோடியும் தமிழ்நாடு அரசு ரூ.50.00 கோடியும் நிதி வழங்கியுள்ளன. இந்த உயர் திறன் பயிற்சி மையங்கள், தொடர்புடைய துறையின் திறன் மிகு

மையங்களாகவும் அத்துறையில் ஏற்கனவே உள்ள திறன் சூழலை மேம்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்படும்.

ஒவ்வொரு உயர் திறன் பயிற்சி மையமும் ஒரு சிறப்பு நோக்கு அலகாக கம்பெனி சட்டம், 2013 பிரிவு 8–ன் படி இலாப நோக்கமற்ற முறையில் செயல்படும். அரசின் பங்காக ரூ.1.00 கோடி மற்றும் தொழில் நிறுவன கூட்டமைப்பின் சரிசம பங்காக ரூ.1.00 கோடியுடன் பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்பாக (PPP) சிறப்பு நோக்க அலகானது செயல்படும்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் வேகமாக வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்கேற்ப பன்னாட்டு தர நிர்ணயங்களின் அடிப்படையில் சிறப்பாக வகுக்கப்பட்ட வசதிகளோடு நமது மாநிலத்தின் இளைஞர்கள் உலக அளவிலான வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையில் திறன் பயிற்சிகளை வழங்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பள்ளி / கல்லூரி படிப்பை இடையில் விட்டவர்களுக்கு திறன் பயிற்சி

வழங்குவது மட்டுமின்றி தகுதியுடைய நபர்களின் திறனை மேம்படுத்தி அவர்களது வேலைவாய்ப்பு பெறும் தகுதியினையும் அதிகரிக்க செய்கிறது. இன்றைய நிலையில் தமிழ்நாடு வலுவான திறன் சூழலைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது தனது தொடர் முயற்சியின் மூலம் அதனை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டை நாட்டின் திறன் தலைநகரமாக உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது ஆண்டுதோறும் **2,00,000** இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்க வேண்டுமென்ற உயரிய இலட்சியத்துடன் செயல்பட்டு வருகிறது.

## 5. அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் 1978–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்.

### 5.1. பதிவு

வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்வதற்கேதுவாக URL:https://www.omcmanpower.com என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் ஆன்லைன் மூலம் செய்யப்படும் பதிவு மே 2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மார்ச் 2019 அன்றமைந்தவாறு 2,311 நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி தங்களது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

## 5.2. செயல்பாடுகள்

- வெளிநாட்டு வேலைநாடுநர்களை பணியமர்த்தல்.
- உள்நாட்டு வேலையளிப்போருக்கு மனிதவளம் வழங்குதல்.
- அரசுத்துறைகளுக்கு விமானப்பயணச்சீட்டு அளித்தல்.
- விழிப்புணர்வு / பதிவு முகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்.
- வெளிவிவகார அமைச்சகத்தின் சான்றிதழ் சான்றொப்பம் பெற உதவி புரிதல்.
- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு ஆதரவுக்கரம் அளித்தல்.

## 5.3. பணியமர்த்தல்

### 5.3.1. வெளிநாடு

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978–ஆம் ஆண்டு முதல் இதுவரை 10,042 பதிவுதாரர்கள் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2018–19–ஆம் நிதியாண்டில் 101 மனுதாரர்கள் சவூதி அரேபியா, ஷார்ஜா, ஓமன் மற்றும் இதர நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இப்பணியமர்த்தலில் பெரும்பாலானவர்கள் செவிலியர் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் ஆவர்.

### 5.3.2. உள்நாடு

உள்நாட்டு வேலைக்கான பணியமர்த்தல் பிரிவு ஏப்ரல் 2017–ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 2018–19–ஆம் நிதியாண்டில் 312 ஒப்பந்த பணியாளர்கள் பல்வேறு பிரிவுகளில் தமிழ்நாட்டிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். உள்நாட்டு பணியமர்த்தல் மூலம் 2018–19–ஆம் நிதியாண்டில் சேவைக்கட்டணமாக ரூ.10.63 இலட்சத்தினை இந்நிறுவனம் ஈட்டியுள்ளது.

### 5.4. வருவாய்

2018–19–ஆம் நிதியாண்டில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு முந்தைய வருவாய் ரூ.1.60 கோடியாகவும் மற்றும் தணிக்கைக்கு முந்தைய லாபம் ரூ.45.53 இலட்சமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

### 5.5. ஈவுத்தொகை

2018–19–ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை ரூ.4.50 இலட்சம் 2018–19–ஆம் ஆண்டைய பொதுக்குழு கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு அரசுக்கு வழங்கப்படும்.

## 5.6. புதிய முயற்சிகள்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தன் செயலாக்கத்தினை மேம்படுத்தும் பொருட்டு கனடா, ஆஸ்திரேலியா, கத்தார், சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல புதிய வேலையளிப்போரிடமிருந்து வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நிறுவனம் **2019–20**–ஆம் நிதியாண்டில், **1000**–த்திற்கும் மேற்பட்ட நபர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்ப நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனை செயல்படுத்த இந்நிறுவனம் ஒவ்வொரு நாட்டிற்கும் தேவைப்படும் மனிதவளத் தேவைகளை பெறுவதற்கு ஆலோசகர்களை நியமித்துள்ளது. எதிர்காலத்தில் இந்நிறுவனம் மனிதவளத் தேவையுள்ள வெளிநாட்டு அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் நேரடியாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள உத்தேசித்துள்ளது. இதன் அடிப்படையில் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுடன் நீண்டகால வணிக தொடர்புகளை ஏற்படுத்த அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வழிவகை செய்யும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்கள் பயன்பெறும்

வகையில், தமிழ்நாட்டில் பகுதி / முழு நேர பயிற்சி மையங்களை அமைக்க இந்நிறுவனம் உதவி புரியும். மேலும், அயல்நாட்டு நிறுவனங்களுக்கு தேவைப்படும் குறிப்பிட்ட திறனுடைய பணியாளர்களுக்கு இம்மையங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் திறமையான நபர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

## 6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஓர் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டம் 1948–ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது. இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு இவ்வியக்ககம் மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

இத்திட்டம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டு காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு நோய்கள், மகப்பேறு, தொழில்முறை நோய்கள் காரணமாக ஏற்படும் இயலாமை, மரணம் போன்ற நிகழ்வுகளில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி தருகிறது. பத்து மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு இத்திட்டம்

பொருந்தும். இத்திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு முழு இலவச மருத்துவ வசதிகள் மட்டுமின்றி காப்பீட்டாளருக்கு உழைக்க இயலாத நிலை அல்லது ஊதிய இழப்பு ஏற்படும் போது பணப்பயன்களையும் அளிக்கிறது.

## 6.1. தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு

மாநில அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குநர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தினை நிர்வகிக்கிறார். இயக்குநரின் நிர்வாக வசதிக்காக நான்கு மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஏழு மருத்துவமனை கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்துார் ஆகிய நான்கு இடங்களில் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகங்கள் அமைந்துள்ளன.

## 6.2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

மாநிலத்தில் கீழ்கண்ட 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன:

- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குநர் (தொ.அ.ஈ.தி.) கட்டுப்பாட்டின் கீழ் சென்னை– அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இயங்குகின்றன.
- மருத்துவ கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயங்குகிறது.
- புதுதில்லி தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் சென்னை (கே.கே.நகர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழிலாளர் மாநில காப்புறுதி கழக மருத்துவமனைகள் இயங்குகின்றன.

தமிழ்நாட்டில் கீழ்கண்ட **218** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்படுகின்றன

- ❖ **211** நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்
- ❖ **5** நடமாடும் மருந்தகங்கள்
- ❖ **2** பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்

காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நேர்வுகளில் உயர்சிறப்பு

சிகிச்சைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலமாக கூடுதல் மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. **30.06.2019** வரை **184** சிறப்பு மற்றும் **163** அதிசிறப்பு தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்**

இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த 'ஆயுஷ்' (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகிறது.

- ஆயுர்வேத மற்றும் யோகா பிரிவுகள் அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன.
- யுனானி பிரிவுகள், அயனாவரம், மதுரை ஆகிய இரண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன.
- சித்த மருத்துவ பிரிவுகள், அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன.

கூடுதலாக சித்த மருத்துவப் பிரிவுகள் தாம்பரம், திருவொற்றியூர், திருபெரும்புதூர், தூத்துக்குடி, இராஜபாளையம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, துடியலூர், பள்ளிபாளையம், கும்பகோணம், திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், திண்டுக்கல், திருநகர், உடுமலைப்பேட்டை, காட்டூர்– 1, திருப்பூர் –1, ஆம்பூர், இராணிப்பேட்டை ஆகிய 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் இயங்குகின்றன.

- ஹோமியோபதி பிரிவுகள், அயனாவரம், மதுரை ஆகிய 2 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன.

## 6.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் இணைக்கப்படுவதற்கான தகுதிகள்

மாத ஊதியம் ரூ.21,000/– வரை பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவராகிறார்கள். மேலும் ரூ.25,000/– வரை மாத ஊதியம் பெறும் ஆட்டிசம், செரிபரல்பால்சி, மூளை வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் பல்வகை குறைபாடுகளுடைய தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

தொழிலாளர்களின் பங்களிப்பாக ஒவ்வொரு மாதமும் அவர்களது ஊதியத்தில் ஒரு சதவீதமும் மற்றும்

வேலையளிப்போரின் பங்களிப்பான நான்கு சதவீதமும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தால் பிடித்தம் செய்யப்படுகிறது.

மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் காலாண்டு அடிப்படையில் திரும்ப வழங்கி வந்தது. 01.04.2019 முதல் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம், முதல் மூன்று ஆண்டுகளுக்கு இத்திட்டத்திற்கான மொத்த செலவினத்தையும் திரும்ப வழங்க உள்ளது.

## 6.4. பயன்கள்

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பயன்கள் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது.

### (1) உடல் நலமின்மை உதவி

காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மை உதவி பணமாக வழங்கப்படுகிறது. ஆறு மாத காலத்தில்

78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்திய காப்பீட்டு நபர் இவ்வுதவியினைப்பெற தகுதியுடையவராகிறார்.

**(2) உடல் நலமின்மைக்கான நீட்டித்த கூடுதல் உதவி**

குறிப்பிட்ட 34 வகையான நீண்டகால நோய்களில் காப்பீட்டாளருக்கு சிகிச்சையும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் பணிக்குச் செல்ல இயலாத காலங்களில் மருத்துவ ஆலோசனையின்பேரில், விடுப்பிலிருக்கும் நாட்களுக்கு உடல் நலமின்மைக்கான நீட்டித்த பண உதவியும் வழங்கப்படுகிறது.

**(3) உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி**

ஆறு மாத காலத்தில் 78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினைச் செலுத்திய காப்பீட்டு நபர் இவ்வுதவியினைப்பெற தகுதியுடையவராகிறார். கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ள தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் கருத்தடை (வாசக்டமி / ட்யூபக்டமி) செய்து கொள்ளும்போது, உயர்த்தி வழங்கும் உடல்நலமின்மைக்கான உதவி வழங்கப்படுகிறது.

**(4) மருத்துவ உதவி**

தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் முழுமையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் அதிசிறப்பு சிகிச்சை ஆகியவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன.

**(5) பேறுகால உதவி**

பெண் காப்பீட்டாளருக்கு, பேறுகால உதவியாக 182 நாட்களும், கருச்சிதைவு உதவியாக 42 நாட்களும் மற்றும் மகப்பேறு தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைக்கு மேலும் 30 நாட்களும் அளிக்கப்படுகிறது. ஒரு வருடத்தில் 70 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்திய பெண் காப்பீட்டு நபர் இவ்வுதவியினைப் பெற தகுதியுடையவராகிறார்.

**(6) ஊனமுற்றோருக்கான உதவி:**

காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் நலக்குறைகளுக்கும், தொழில் வழி நோய்களுக்கும் ஊனமுற்றோருக்கான உதவி வழங்கப்படுகிறது.

**(அ) தற்காலிக ஊனமுற்றோருக்கான உதவி**

ஈட்டுறுதி பெறத்தகுந்த வேலையில் சேர்ந்த நாள் முதலே, காப்பீட்டாளருக்கு தற்காலிக ஊனம் ஏற்படும்போது தற்காலிக ஊனம் தொடரும் வரை, **90** விழுக்காடு ஊதியம் மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில் வழங்கப்படுகிறது.

**(ஆ) நிரந்தர ஊனமுற்றோருக்கான உதவி**

ஈட்டுறுதி பெறத்தகுந்த வேலையில் சேர்ந்த நாள் முதலே நிரந்தர ஊனம் உள்ள காப்பீட்டாளருக்கு அவர்தம் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

**(7) சார்ந்து வாழ்பவருக்கான உதவி**

வேலை செய்யும்போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழிலினால் ஏற்பட்ட நோயினால்

காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரைச் சார்ந்து வாழ்பவருக்கான உதவி வழங்கப்படுகிறது.

**(8) இறுதிச் சடங்கிற்குரிய உதவி:**

ஈட்டுறுதி பெறத்தகுந்த நபர் வேலையில் சேர்ந்த நாள் முதலே காப்பீட்டாளரின் இறுதிச் சடங்கிற்கு ரூ.15,000/– வழங்கப்படுகிறது.

**(9) வேலை இழந்தோருக்கான உதவி :**

மூன்று வருடம் தொடர்ந்து வேலை பார்த்தபின், பணியிடங்களில் பணியாளர் குறைப்பு மற்றும் இதர எதிர்பாராத காரணங்களால் வேலை இழக்கும் காப்பீட்டாளர் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் வேலை இழந்தோருக்கான படியினை, அவர் கடைசியாக வாங்கிய சராசரி சம்பளத்தில் 50 விழுக்காடு ஒரு வருட காலத்திற்குப் பெற தகுதியுடையவராகிறார்.

**(10) காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்து கொண்ட சிகிச்சைக்கான செலவினை திரும்ப வழங்கல்.**

**(அ) சுழற்சி நிதி**

மாநில அரசால் **2004–**ஆம் ஆண்டில் 'சுழற்சி நிதி' உருவாக்கப்பட்டது. காப்பீட்டாளர்கள் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைக்காக செலவிட்ட தொகையை தாமதமின்றி திரும்ப பெறுவதற்காக இது உருவாக்கப்பட்டது. சிறப்பு மற்றும் அதிசிறப்பு சிகிச்சை பட்டியல்களுக்கும் சிகிச்சைக்கான செலவு திரும்ப வழங்கப்படுகிறது. **2018–2019–**ஆம் நிதியாண்டில் தனியார் மருத்துவமனைகளில் சிறப்பு / அதிசிறப்பு சிகிச்சை எடுத்துக்கொண்ட காப்பீட்டு நபர்களுக்கு **ரூ.33.34 கோடி** வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) தொகுப்புத்திட்டம்**

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு சிறப்பு மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக **184** தனியார் மருத்துவமனைகள், மருத்துவத்திற்காக தொகுப்பு திட்டத்தின்கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி

மருத்துவமனை மற்றும் மருந்தகங்களின் பரிந்துரையின் பேரில் தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சிகிச்சைக்குப் பின்பு தனியார் மருத்துவமனைப் பட்டியல்கள் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தால் நேரிடையாக தொகுப்பு திட்டம் மூலம் நேர் செய்யப்படுகின்றன.

## 6.5. இதர உதவிகள்

(1) வயது மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்றவர்களிடமிருந்து குறைந்த பட்ச தொகையாக ஆண்டுக்கு ரூ.120/– பெற்று, அவருக்கும் அவரது துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

(2) இத்திட்டத்தின் கீழ், காலிழந்தோர் பயன்படுத்தும் ஊன்றுகோல் மற்றும் செயற்கை கால், சக்கர நாற்காலி, பல்செட், மூக்கு கண்ணாடி போன்ற சாதனங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(3) வரும் முன் காக்கும் திட்டங்களான நோய் தடைக்காப்பு, எச்ஐவி / எய்ட்ஸ் நோய் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் உள்ளன.

(4) குடும்ப நலத் திட்டம், காசநோய் சிகிச்சை ஆகிய தேசிய திட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன.

(5) காப்பீட்டாளரின் மனைவி மற்றும் பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறாதிருந்தால் மருத்துவ ஊக்கத் தொகையாக ரூ.5,000/– அளிக்கப்படுகிறது.

**6.6.** புதிய வசதிகள்

திருப்பூர் மாவட்டத்தில் 100 படுக்கை வசதிகள் கொண்ட புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோரின் முன்னிலையில் மாண்புமிகு இந்திய பிரதமரால் 10.02.2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்), பெருமாநல்லூர் (திருப்பூர் மாவட்டம்) ஆகிய இரு இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

**டாக்டர் நிலோபர் கபில்**
**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**